சிந்துவெளியில் தமிழ்மொழி

- புதிய ஆய்வுகள்



பூரண சந்திரஜீவா

சிந்துவெளியில் தமிழ்மொழி
- புதிய ஆய்வுகள்

பூரண சந்திர ஜீவா, எம். ஏ., பி. எட்.,

தய்யல் பதிப்பகம்
4 / 34, பிள்ளையார்கோயில் தெரு,
பா. மாதர்பாக்கம் - 601 202.
செங்கை அண்ணா - மாவட்டம்

First Print: February, 1990.

Printed by
Chowdary Printers,
12, Palani Andavarkoil Street,
Madras - 600 026.
Composed by Miss L. Sasikala.

Published by
THAIYAL PATHIPPAGAM,
4/34, Pillayarkoil Street,
P. Madarpakkam - 601202,
Chengai Anna - Dist.

Poorna Chandra Jeeva, M.A., B.Ed.,
4/34, Pillayar koil Street,
P. Madarpakkam - 601 202
Chengai Anna - Dist

Price Rs: 35.

பொருளடக்கம் :-

மானுட முன்னோடிகள்



பெற்றோர் : திரு. எஸ். ஜி. பக்கிரிசுவாமி

திருமதி. பி. முனியம்மாள்

என் நினைவறிந்த நாள் முதல் எனது இலக்கிய ஆர்வத்துக்கும், ஆய்வுப் பணிகளுக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்த அன்பின் வடிவங்களுக்கு :

இந்நூல் காணிக்கை

படங்களுக்குரிய விளக்கம் :-

மேலும், 28 பொருள் விளக்கப் படங்களுடன்.

நன்றியுரை

உன்னதமான என் குழந்தைப் பருவக் கனவுகளில் ஒன்று இன்று நிறைவேறுகிறது. தஞ்சை மாவட்டம், கபிஸ்தலம் என்ற சிற்றூரில் கோவிந்தசாமி மூப்பனார் உயர்தொடக்கப் பள்ளியின் கீற்றுக் கொட்டகைக்குக் கீழே வரலாற்றுப் புத்தகத்தின் பழுப்பேறிய ஏடுகளில் சிந்துவெளி முத்திரை எழுத்துக்களின் நெளி நெளியான கோடுகளைத் தொட்டு, 'இது எனக்குப் புரிகிறமாதிரிதான் இருக்கிறது' என்று நினைத்தது— அந்த வினோதமான உணர்வு —இன்னும் கூட நெஞ்சில் அட்டையைப்போல ஒட்டிக்கொண்டிருக்கிறது.

'புரிகிற மாதிரி இருந்தது' இன்று எனக்குப் புரிந்ததுதான் என்று உறுதியாகி விட்டது. இன்று சிந்துவெளி முத்திரைகளில் ஒன்றிரண்டு குறியீடுகளைத் தவிர பிற அனைத்தையும் என்னால் தெளிவாகப் படிக்க முடியும். மேலும், எழுத்துக்களுக்கு நான் அளித்துள்ள ஒலியன்கள் ஊகத்தின் அடிப்படையில் அளிக்கப் பெற்றவையல்ல. அவற்றை எந்த முத்திரையுடனும் பொருத்திப் படிக்கலாம். வெறும் அசைகளை ஒன்றிரண்டாக ஒட்டி ஒரு பெயர் என்று காட்டுவதில்லை. சிந்துவெளி நாகரிகத்திற்கு ஏற்புடைய பொருள் விளக்கங்களை, செய்தித் தொடர்களை அவற்றில் காணலாம். ஆயினும் கூட இந்த எழுத்தாராய்ச்சி முடிந்துவிட்டதாக நான் ஒருபோதும் நினைக்க மாட்டேன்.

ஆய்வு நிலையிலும், நூல் வெளியிடுவதிலும் எனக்கு உதவிய அன்புள்ளங்களை இந்த நேரத்தில் நினைக்கிறேன். நூல் வெளியிட ஆர்வமூட்டி, ஆராய்ச்சிக்குப் பொருளுதவியும் வழங்கிய என்னுடைய பெற்றோர் ; அன்பு மைத்துனர் டாக்டர் ஆ, இரத்தினவேலு, M.B., B.S, அவர்கள்; என் தம்பிகள், திரு என். பி. பிரிதிவிராஜ் B.Sc., CAIIB; திரு P. அசோகன், B.Sc., ஆகியோருக்கும்; முத்திரை எழுத்துக்களை ஆராய்ந்து விளக்கம் காணும் முயற்சியில் என்னுடன் பங்கேற்று உதவிய என் உயிர்த்துணைவி திருமதி தையல்நாயகி, 'அப்பா ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்காங்க, சத்தம் போடாதேடி' என்று தன் நான்கு வயது தங்கையை அவ்வப் போது எச்சரிக்கும் என் ஆறுவயது மகனுக்கும் கூட நன்றி கூறுகிறேன்.

இந்நூலில் பிழைத்திருத்தம் செய்து உதவிய திரு மு. முகம்மது அலி, M.A., M.Ed, அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் தய்யல் பதிப்பகத்தினருக்கும், இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த சௌதரி பிரிண்டர்ஸ், சென்னை - 26, உரிமையாளர் திரு. ரங்காராவ்] அவர்களுக்கும் எனது நன்றி. இந்நூலின் அச்சுப் பணிகளுக்குப் பொறுப்பேற்றுச் செய்த என் மைத்துனன் இராம, நவீன்குமார் மற்றும். 'சிந்துவெளி மொழியாராய்ச்சி மய்யம்' நண்பர்களுக்கும் என் நன்றி.

தமிழ்மொழி கி. மு. 3000 ஆண்டிலேயே வளர்ச்சியுற்று விளங்கியதையும், தமிழன் உலக நாகரிகங்களில் ஒன்றான சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கி வளர்த்தவன் என்பதையும் எண்ணி இப்போது பெருமிதம் கொள்கிறேன்.

1. அறிமுகம்

உலக நாகரிகங்களில் ஒன்றென எண்ணப்பெறும் சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கி வளர்த்த மக்கள் யார், அவர்கள் எம்மொழியைப் பேசினர் என்ற கேள்வி பல்லாண்டுகளாக ஆய்வாளர்கள் இடையே நிலவி வருகின்றது. அம்மக்கள் திராவிடர், அவர் தம் மொழி தமிழைப் போன்ற ஒரு திராவிட மொழி என்றே அறிஞர்கள் பலரும் கூறினர். அந்தக் கருத்தே உலக அறிஞர்கள் இடையே பரவலாக ஏற்கப்பெறும் கருத்தாக உள்ளது.

ஆயினும், அண்மைக்காலமாக சிந்துவெளி மக்களின் மொழி ரிக்வேத காலத்து சமஸ்கிருதம் என்று கூறி, அதற்கு விளக்கம் அளித்தும் வருகின்றனர். தங்கள் ஆய்வுகளில் ரிக்வேதத்தில் காணும் சொற்கள் என்று சில தொடர்புடைய சொற்களை அமைத்துக் காட்டியுள்ளனர்.

அத்தகைய அறிஞர்கள் ஓர் அசைக்கு இருபதுக்கும் அதிகமான சிந்துவெளி எழுத்தின் ஒத்த வடிவமுள்ள குறிகளையும், கூட்டெழுத்துக்களையும் அமைத்துள்ளனர். அவ்வடிவங்களுக்கு அவர்கள் வழங்கியுள்ள ஒலிகளும் தன்னிச்சையாக வழங்கப்பெற்றவையே. ஓர் ஒலியனுக்கு; அல்லது அசையொலிக்கு வெவ்வேறு மாறுபட்ட குறிகளோ, எழுத்துக்களோ இருக்கமுடியுமா? எம்மொழியிலும் அவ்வாறு இருக்க முடியாது. இருப்பின் இயங்க முடியாது.

இத்தகைய நிலையில் இருந்து மாறுபட்டு சிந்துவெளி எழுத்துக்களை ஆராய்ந்து உண்மையை நிலைநாட்ட வேண்டும் என்ற எனது பதினைந்தாண்டு கால முயற்சியின், ஆராய்ச்சியின் முடிவுதான் இந்நூல். இந்நூலில் என் ஆய்வு முடிவுகளைச் சுருக்கமாக விளக்கி இருக்கின்றேன். ஆராய்ச்சி என்பதே உண்மைகளை வெளிப்படுத்துவதுதான். குறிப்பிட்ட ஒரு கருத்தினை மனதில் அமைத்துக் கொண்டு, அதற்கேற்ப ஆய்வு முடிவுகளை வளைப்பது ஆய்வு ஆகாது. இந்நூலில் காணும் முடிபுகளைக் கற்போர் இவ்வுண்மையை உணர்வார்கள்.

சிந்துவெளி மொழி எது என்ற கேள்விக்கு இந்த நூல், ஒரு பொருத்தமான பதிலாக அமைகிறது. ஆயினும், தமிழைப் பொறுத்தவரை இத்துறையில் இது ஒரு சிறு முயற்சியே; முதல் முயற்சியே ஆகும். சிந்துவெளி மக்கள் பேசிய மொழி திராவிட மொழிதான். இன்று வழக்கில் உள்ள தமிழ் முதலான மொழிகள் அடங்கிய திராவிடக் குழுவின் ஒரு பழைய மொழியே - வடிவமே சிந்துவெளி மொழி என்று தெரிகிறது. தமிழுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. இம்மொழி மூலத் திராவிட மொழிக்கு (Proto Dravidian) நெருங்கிய உறவுடையது. எனவே மூலத்திராவிட மொழி சிந்துவெளி மொழியைவிட மிகப் பழமையானது என்று அறிகிறோம். அதனை இந்த ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

கி. மு. 3000 அளவில வழங்கிய உலக மொழிகளில் சிந்துவெளி மொழியைவிட நன்கு வளர்ச்சியுற்ற வேறொரு மொழி இருந்திருக்க முடியாது என்று உறுதியாகக் கூறலாம். அத்தகைய மொழியின் முத்திரைகளை வண. ஹீராஸ் பாதிரியார் காலம் முதல், இன்று திரு. ஐராவதம் மகாதேவன் காலம் வரையில் பல்வேறுபட்ட அறிஞர்களும் ஆராய்ந்துள்ளனர். சாவியத் - பின்லாந்து நாட்டு அறிஞர்களும் பிறரும் கூட விரிவாக ஆராய்ந்துள்ளனர்

இத்தகைய அறிஞர்கள் பலரும் தங்கள் ஆய்வுகளில் சிந்துவெளி மொழி திராவிட மொழிதான் என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர். இவர்கள் தங்கள் ஆய்வுகளுக்கு உரிய விளக்கங்களும் கூட அளித்துள்ளனர்.

ஆனால், சிந்துவெளி மொழி ரிக்வேத மொழி என்று கருதும் அறிஞர்களது முன் கருதுகோளை இயல்பாக ஏற்றுக் கொள்ளும் திறனாய்வாளர்கள் அது தமிழுடன் தொடர்புடைய ஒரு திராவிட மொழி என்று கூறுபவர்களை, ஏதோ அவர்கள் இட்டுக்கட்டிக் கூறுவது போலவும், அது திராவிட மொழியே அல்ல என்று யாரோ உறுதி செய்துவிட்டதைப் போலவும் எண்ணி அலட்சியம் செய்கின்றனர். இத்தகைய அறிஞர்களே முன்பு, கி. மு. 300 அளவிலேயே தமிழ் உருப்பெற்று இலக்கிய மொழியாயிற்று என்று கூறி வந்தனர்.

திராவிட மொழிக் கொள்கையாளர்களது ஆய்வுகளும், கருத்துக்களும் என் ஆய்விற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தன. அவர்கள் தங்கள் முடிவுகளை எட்டுவதில் சில அடிப்படையான தவறுகள் செய்திருப்பினும், அவர்கள் உணர்ந்து கொண்டது சரிதான். வேதகால மொழிக் கொள்கையாளர்களைப்போல எழுத்துக்களுக்கும் அசைகளுக்குமான குறியீட்டுக் கூட்டங்களை மட்டும் நம்பிக் கொண்டிராது, சிந்துவெளி மொழியினை ஆராய அம்மக்களது சமூக, பொருளாதார, மற்றும் நாகரிசக் கூறுகளையும் ஒப்பு நோக்கி அவற்றின் அடிப்படையில் அந்த மொழியை ஆராய்ந்தனர். மேலும், தங்கள் ஆய்வுகளில் கண்ட முடிவுகளுக்கு ஏற்ப, தாங்கள் பொருந்துவதாகக் கருதிய திராவிட மொழிகளின் இயல்புகளை அவற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தனர். வேதகால மொழிக் கொள்கையினர் இத்தகைய அடிப்படை நோக்கங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. முயற்சித்த போதும் அத்தகைய விரிவான அடிப்படை கிட்டவில்லை. எனவே, அவர்கள் தங்கள் ஆய்வு முறைகளில் படுதோல்வி அடைந்தனர்.

எடுத்துக் காட்டாக திரு எஸ். ஆர். இராவ் சிந்துவெளி மொழி வேதகால மொழி என்று உறுதியாக நம்புபவர். அம்மொழியில் பகா, மகாபகா போன்ற ரிக்வேத அடைமொழிகள் நிறைந்திருப்பதாக அவர் கூறுகிறார்[1]. ஆயினும், இதுவரையிலும் கிடைத்துள்ள ஏறக்குறைய 3000 முத்திரைகளில் ஒரு முத்திரையிலேனும் மேற்கண்ட அடைமொழிகளுக்கு உரிய தெய்வங்களின், மேலோர்களின் பெயர்கள் ஏன் குறிப்பிடப் பெறவில்லை என்ற விளக்கத்தை அவரால் தர முடியவில்லை. ரிக் முதலான வேதங்களில் அவ்வாறு பெயர்கள் ஆளப்படாது, அடைமொழிகள் மட்டுமே உள்ளனவா? இம்முத்திரை எழுத்துக்களில் ஒரு ரிக்வேத தெய்வத்தின் பெயரையேனும் காட்ட இயலுமா? வேதங்களில் தெய்வங்களின் பெயர்கள் பல்லாயிரம் முறை ஆளப்பெறுவதை நாம் அறிவோம். எனவே, உறுதியற்ற நிலையில் தங்கள் முடிவுகளை எதிர் நோக்கி இருந்த திராவிட மொழிக் கொள்கையாளர்களது நிலைமையைவிட முடிவு கண்டுவிட்டோம் என்று பெருமை பாராட்டிய வேதமொழிக் கொள்கையாளர்களது நிலைமையே பரிதாபமானது எனலாம்.


ஆயினும், திராவிட மொழிக் கொள்கையாளர்கள் முத்திரைகளில் உள்ளவை ஒலிய எழுத்துக்கள் என்றும், குறியீட்டு வடிவங்கள் என்றும் கருதிக் கொண்டிருக்கும்போது, அம்மொழி ஒலியெழுத்துக்களும், உயிர்மெய்வகை எழுத்துக்களும், அல்லது இரண்டும் கலந்து காணப்பெறுவது என்று கருதிய திரு எஸ். ஆர். இராவ் அவர்களது ஆய்வு முறையே என்னை மிகவும் கவர்ந்தது. மாறுபட்ட ஆய்வுக் கருத்துக்களைக் கொண்டிருந்த போதும், அவருடைய ஆய்வு முறையே இந்திய ஆய்வாளர்கள் இடையே தன்னிகரற்றுத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. அவர் தமிழராகப் பிறந்திருந்தால் சிந்துவெளி முத்திரைகள் தெளிவாகப் படிக்கப் பெற்று பத்து ஆண்டுகளுக்குமேல் ஆகி இருக்கும் என்பது என் கருத்தாகும்.

ஆரம்ப கால ஹாரப்பா மொழி 52 குறியீடுகளையும், 12 படவெழுத்துக்களையும், 40 வரைகோட்டுக் குறிகளையும் கொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.[2] ஆரம்பம் முதலே என் ஆய்வுகள் அவரது கருத்துக்கு முரண்பட்டே இருந்தன. தனி எழுத்துக்களின் அமைப்புமுறை, அவ்வெழுத்துக்கள் சில குறியீடுகளை ஏற்று மாறுபட்டிருந்த நிலை அவ்வெழுத்துக்கள் ஒலியெழுத்துக்கள் என்பதைக் காட்டுகின்றன. இன்று நம் ஆய்வுகள் சிந்துமொழி ஒலியெழுத்துக்களால் ஆகிய உயர்தனிச் செம்மொழியாக விளங்கிற்று என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. பழங்காலச் செம்மொழிகளான அஸ்ஸிரியம், சீனம் போன்ற மொழிகள் உயிர்மெய்வகை (Syllabary) எழுத்துக்களைக் கொண்டுள்ளன. ஆனால், அவற்றினும் வளர்ச்சியுற்ற சிந்துவெளி மொழி உயிர்மெய்வகை, அகரமுதல்வகை ஆகிய (Alphabetic) இருவகைகளும் கலந்ததொரு மொழியாக விளங்குகின்றது. இதனை ஆய்வுகள் நன்கு உணர்த்துகின்றன.

ஆரம்பம் முதலே எனது ஆய்வுகள், பல்வேறு அறிஞர்கள் வெளியிட்ட ஆய்வுக் கருத்துக்களுடன் முரண்பட்டதாகவே இருந்து வந்தன. எல்லா குறியீடுகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது, அவற்றுள் ஒரு சில குறிகளே அடிப்படையாக இருப்பதும், அதே குறிகள் பல இடங்களில் தனி நிலையில் ஆளப்பெறுவதுடன், ஒன்றும் இரண்டும் குறியீடுகளை ஏற்று இருப்பதையும், அதே எழுத்துக்கள் சில ஒன்றிணைந்து ஒரு ஓர் அழகிய ஓவியம் போலத் திகழ்வதையும் உணர்ந்தேன். ஆனால், அந்த ஓவியங்கள் ஒரு பெயரையோ, பொருளையோ உணர்த்தாது, அழகிய அமைப்பு ஒன்றினையே நோக்கமாகக் கொண்டிருந்ததையும் அறிந்தேன் எனவே, அவை ஓவிய எழுத்துக்கள் அல்ல என்பதையும், கூட்டெழுத்து வடிவங்களாகலாம் என்பதையும் புரிந்து கொண்டதால், இதுவே ஆய்விற்கு முதுகெலும்பாக விளங்கியது. இந்தக் கொள்கையாக்கம் சிந்துவெளி முத்திரை வடிவங்களை 50% அளவிற்குப் புரிந்து கொள்வதற்கான அடிப்படையையும் நல்கிற்று. குறியீடுகள், குறிகளின் எண்ணிக்கை குறைந்ததால், சிந்துவெளி மக்கள் பேசியமொழி முழுதும் ஒலியன் மதிப்புள்ள வரிவடிவங்களால் ஆனது என்னும் கருத்து உருவாகலானது.

திரு எஸ். ஆர். இராவ் கூறியது போன்று அத்தனைக் குறிகளும், குறியீடுகளும் இருக்க முடியாது என்ற எண்ணம் வலுவடைந்தது. எனவே, அடிப்படைக் குறியீடுகள் எத்தனை என்று அறியும் தேவையும் எழுந்தது. மேலும், மெய் - உயிரேற்றவடிவம் - கூட்டெழுத்து என மூன்று நிலைகள் சிந்துவெளி மொழியில் உள்ளன. இவற்றை முறையே பகுத்தாராய்ந்ததன் பயனே மேற்கண்ட முடிவிற்குக் காரணம். இக்கருத்துத்தான் இந்த ஆய்வின் முதுகெலும்பாக விளங்கியது.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் பிரம்மி குகைக் கல்வெட்டுகளில் காணும் எழுத்து வடிவங்கள் சில, சிந்துவெளி முத்திரை எழுத்துக்களில் இருப்பது என் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது. ஏறக்குறைய 10 ஹாரப்பா அடிப்படை வடிவங்களை ஒத்த எழுத்துக்கள் அவற்றில் இருந்தன. அவற்றுள் ஒரு சில எழுத்துக்கள், கீழ்க்கண்ட படத்தில் ஒப்பிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.



சி. வெ: = க் - ட் - த் - ற் - ய்

கு. க: = க் - ட் - த் - ற் - ய்

படம்—1

இவ்விரு எழுத்துக்களிடையேயும் சிறப்பான ஒற்றுமைகள் உள்ளன. முத்திரைகளில், இந்த அடிப்படை வடிவங்களின் மீது மேலும் குறியீடுகள் சேர்க்கப்பெற்றும், அடிப்படை வடிவங்கள் ஒன்றிணைந்தும் இருந்ததால் நான் பெற்ற அடிப்படைக் கருத்துக்கள் வருமாறு: 1. சிந்துவெளி எழுத்துக்களுக்கும் குகைக் கல்வெட்டு எழுத்துக்களுக்கும் இடையே ஒரு தொடர்புள்ளது. 2. கூட்டெழுத்துக்கள் அமைந்த முத்திரை வடிவங்கள், அடிப்படை எழுத்துக்கள் இணைந்து, அவ்வாறு இணைந்ததால் பெற்ற வேறுபாடுகளுடனான அசைகளுக்கு உரிய ஆயத்த வடிவங்களே. இக்கருத்துக்கள் என் ஆய்வுக்கு நல்ல வழிகாட்டு நெறிகளாயின.


இப்போது, எழுத்துக்கள் எவை, அசைகளுக்குரிய ஆயத்த வடிவங்கள் எவை என்பன போன்ற மிகத் தெளிவான கண்டுபிடிப்புகள் உள்ளன. அதே சமயம், தமிழ் எழுத்துக்கள், அவற்றிற்கான குகைக் கல்வெட்டு எழுத்துக்கள், அவற்றுடன் வடிவ ஒப்புமையுடைய சிந்துவெளி முத்திரைக் குறிகள் என முக்கூறாக அமைந்த ஒரு பட்டியலை உருவாக்கிக் கொண்டு, அதன் அடிப்படையில் சிந்துவெளி முத்திரைகளில் உள்ள எழுத்துக்களை ஒப்பு நோக்கி, ஒவ்வொரு எழுத்துக்கும் இரவு பகல் பாராது விளக்கம் தேடி அலைந்ததும நினைவில் நிழலாடுகின்றது.

உயிர் எழுத்துக்கள் 6, மெய்யெழுத்துக்கள் 18, ஆக 24 எழுத்துக்கள் - ஒலிகள் — சிந்துவெளி முத்திரைகளில் உள்ளன. ஐயத்துக்கு உரிய ஙகர மெய்யை நீக்கி 17 மெய்யெழுத்துக்களுக்குரிய ஒலிகளை உறுதியாகக் காட்டலாம். மெய்களில் ல் - ழ் - ள் ஆகிய மூன்று எழுத்துக்களும் முழுமையான ஒலி நிலைகளைப் பெற்றிருந்தாலும், அவற்றை எழுத ஒரே ஒரு மீன் வடிவ எழுத்தே உள்ளது. மீன் வடிவ எழுத்தே மேற்கண்ட மூன்று எழுத்துக்களையும் ஒலிக்கும் வரிவடிவமாகும். இக்குறியே, பின்னர் தமிழுக்கு உரிய சிறப்பெழுத்துக்களில் ஒன்றான ழகரத்திற்கு வழங்கலாயிற்று என்று கருதுவதற்குச் சான்றுகள் உண்டு. சிந்துவெளி வடிவம், குகைக் கல்வெட்டு வடிவம், இன்றைய ழகரத்தின் வடிவம் ஆகியவற்றினைக் காட்டும் படத்தினைக் கூர்ந்து கவனித்தால் இதன் உண்மையினை அறியலாம் (படம்—29). குகைக் கல்வெட்டு வடிவம் இரண்டிற்கும் இடைப்பட்ட வடிவமாகும். (வலதுபுறமிருந்து)

மூன்று ஒலிகளுக்கு ஒரே வடிவம் என்று கூறும்போது, நமக்கு ஓர் ஐயம் எழுகின்றது. சிந்துவெளி மக்கள் மேற்கண்ட மூன்று ஒலிகளையும் பிரித்தறிந்து கொண்டிருந்தனரா என்பதே அந்த ஐயம். ஆனால், முத்திரைகளில் இவ்வடிவங்களுக்கு உரிய ஒலிகள் தெளிவாக உள்ளன. எடுத்துக்காட்டாக இரண்டு முத்திரைகளை நோக்குவோம். (வலதுபுறமிருந்து)

(1)

(2)



படம்—2


(1) தவ - வய - லா - ள - ன் என்பது இதன் (276) பொருள். 'லாள' என்ற இரண்டு எழுத்துக்களும் ஒரே வரி வடிவத்தில் எழுதப் பெற்றுள்ளன. மேலும், இவை உயிர்க் குறியீடுகளை ஏற்று உயிர்மெய் வடிவங்களாகவும் விளங்குகின்றன. ஆனால், சொற்பொருள், மொழிநிலை, ஒலி நிலைகளை நன்கு அறிந்தவர்கள் இந்த முத்திரையைத் திருத்தமாகவே படித்திருப்பர். இதனை, இன்னொரு முத்திரையின் வாயிலாகவும் (355) விளக்கலாம்.

(2) வ - ழலா - நா - கய் - ஆ - க் என்று உள்ளது. இந்த முத்திரையில் 'ழ - லா' என்ற எழுத்துக்கள் ஒரே வடிவத்தில் கூட்டெழுத்துப்போல வருமாறு எழுதப் பெற்றுள்ளன.

ழகரத்திற்கு வழக்கமான மீன் வடிவத்தின் உள்ளே ஒரு சிறு கோடும், லா என்னும் எழுத்திற்கு மீன் வடிவத்திற்கு வெளியே வழக்கமான நான்கு கோடுகளும் உள்ளன. ஒரே வடிவம் இரண்டு எழுத்துக்களை உணர்த்துமாறும், அதே சமயம் குறில் - நெடில் வேறுபாட்டை அறிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது. இவற்றை நோக்க ஒரே வடிவமாயினும், 'ழலா' என்ற ஒலி நிலை வேறுபாடுகளை நன்கு அறிந்தே வழங்கினர் என்றறியலாம். இதனால், மொழிச் சிக்கனத்தையும், சிக்கலான ஒன்றினையும் தெளிவாக விளக்கும் திறத்தையும் அறியலாம்.

சில ஒலிகள் ஒன்றிற்கு மேற்பட்ட வரிவடிவங்களைப் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக ணகர மெய் மூன்று வடிவங்களில் எழுதப்படுகின்றது. மகரமும் அவ்வாறே. இவை வட்டார வேறுபாடுகளா? அல்லது, ஏறக்குறைய 1500 ஆண்டுகள் தொடர்ந்து வழங்கியபோது படிப்படியாக ஏற்பட்ட வடிவமைப்பு வளர்ச்சியா என்று தெரியவில்லை. ஆனால், ஒரே எழுத்தில் ணகரமெய்க்கும், ணகரத்திற்கும், ணா என்ற எழுத்திற்கும் தனித்தனி வெவ்வேறு எழுத்துவடிவங்கள் இருப்பது சிக்கலை மேலும் சிக்கலாக்குகின்றது. மெய்யை குறில், நெடில் உயிர்மெய்களாக அமைத்துக் காட்டுவதற்குத் தெளிவான உயிர்க்குறியீடுகள் உள்ளன. சிறு இடமே உள்ள முத்திரைகள் போல அல்லாமல் சுமேரிய நாகரிக இடங்களில் கண்டெடுக்கப் பெற்ற களிமண் பாள ஏடுகள் போன்ற விரிவான இலக்கிய வடிவங்கள் கிடைத்திருந்தால் சிந்துவெளி மொழியைப்பற்றி இன்னும் மிகுதியாகத் தெரிந்து கொண்டிருக்கலாம்.


சிறுமுத்திரைகளில் எழுதப்படுவதற்கே இம்மொழி பயன்படுவதால் அதற்கேற்ற மாற்றங்கள், இலக்கண அமைப்பு முறைகள், கூட்டெழுத்து வடிவங்கள், குறியீடுகள் காணப்பெறுகின்றன. எனவே, முத்திரைகளுக்கு ஏற்ற வடிவமைப்புகள் அமைவது தவிர்க்க முடியாததாகிறது. இத்தகைய வடிவங்களில் சிறப்பானவை, அசைகள் சொற்களுக்கான கூட்டெழுத்து வடிவங்கள் எனலாம். இப்புறையின்படி ஒரு சொல்லை ஓர் ஓவியம்போல எழுதிக் காட்டுகின்றனர்.




க் + அ + வ் + வ் + அ = கவ்வ

படம்—3

இங்கே (244), வலது மேற்புறம் உள்ள படுக்கைக்கோடு ககரமெய்யினைக் ககர உயிர்மெய் யாக்கு கின்றது. வலதுபுற வளையத்தின் மேற்புறமுள்ள சிறுகோடு வகரமெய்யை உயிர்மெய்யாக்கு கின்றது. இதனால், சவ்வ என்ற சொல்லுக்கு உரிய பிழை இல்லாத ஓவிய வடிவம் கிடைக்கிறது. இது நமக்கு கி. மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குகைக்கல்வெட்டு மொழியினை நினைவூட்டுகின்றது.


சி. வெ:  = க் + அ = க

கு. க:  = க் + அ = க

படம்—4

இவ்விருவகை எழுத்து வடிவங்களும் மிகப் பொருந்தி அமைவதைக் காணலாம். வகரமும் அதே வடிவத்தில் ஒரு கோட்டில் தொங்கும் வளையம்போல குகைக்கல்வெட்டுக்களில் அமைந்துள்ளது.

இவ்வாறு, கூட்டெழுத்துக்களைச் சுருக்கமான இடத்தில் எழுதுவதற்காக அமைக்கப்பட்ட வடிவங்களை வசதிக்காக மட்டுமல்லாது, ஓர் ஓவியம்போலவே கலைநயம் தோன்றவும் அமைத்துள்ளனர்.




ய் + அ + ண் + அ + ன் = யணன்

படம்—5

ஆயணன் (ஆயனன் = ஆயன் + அன்) போன்ற (171) சொற்களின் பின்னசையை எழுத இவ்வடிவம் பயன்படுகின்றது. னகரமெய்யில் ஒரு சிறு மாற்றமும், யகரத்திற்குக் கீழே தொங்க வேண்டிய கோடு, U போன்ற வடிவத்தின் உட்புறம் நின்ற வடிவில் எழுதப்படுவதற்குப் பதில் படுக்கை வசமாக எழுதப்பட்டு யகரமாகிறது. பெரும்பாலும் இம்மாதிரி வடிவங்களில் குறைவாகக் கோடுகளிருந்தால் யகர மெய்யாகவும், அதிகக் கோடுகளிருந்தால் யகர உயிர் மெய்யாகவும் கொள்ளப்படுகிறது. இந்த வேறுபாடுகளுடன் கூட்டெழுத்து ஒரு கலைநயம் மிக்க வடிவமாகித் திகழ்வதைக் காணலாம். இவ்வாறு எழுதுவது ஒரு முத்திரை எழுத்து என்ற அளவில் தேவையினால் உருவாகி, பின்னர் அதுவே கலையாக வளர்க்கப் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு எழுதும் முறையின் வளர்ச்சியில் அடுத்தக் கட்டம் மிகவும் ஆர்வமூட்டுவதாக உள்ளது. கலைநயம் மட்டுமின்றி அறிவாற்றல் மிக்க நிலையாகவும் காணப்பெறுகிறது. சொற்களை அப்படியே அதன் தன்மை கெடாது வடித்துள்ளனர்.



வ + வ் + ய் + அ + வ + ய் = வவ்யவய்

படம்—6

இச்சொல் (160), 'வவ்யவய்' என்ற பொருளில் வருகிறது. ஆநிரை கவர்தலே வவ்வுதல் என்ற பொருளில் கூறப்பெறும் செய்தி. இடதுபுறம் மேலே: வவ், வலதுபுறம் மேலே: ய, நடு மேலே: வ, அடியில்: ய் என்று சொல்லின் எழுத்துக்கள் அமைகின்றன. இம்முத்திரையில் 'வவ்யவய் ஆ இரவ்வ' என்று உள்ளது. வவ்விய பசுக்கள் இருபது என்பது இதன் பொருளாகும். இவ்வாறு, ஒரு சொல்லை ஓவியமாக அமைத்து அழகியத் தோற்றம் தருமாறு செய்துள்ள பாங்கு நினைத்து இன்புறத் தக்கது. இவ்வாறு உருவாக்கிய அம்மக்களது கருத்தாழமும், அறிவாற்றலும், கலையுணர்வும் நம்மை பெருமிதம் கொள்ளச் செய்கின்றன அன்றோ!

இத்தகைய முத்திரை வடிவங்களை எல்லாம் தொகுத்து ஒப்பிட்டு, சிறுசிறு கூறுகளாகப் பிரித்து, ஆழ்ந்து ஆராய்ந்ததன் பயனே இன்று சிந்துவெளி முத்திரைகள் படிக்கப் பெற்றதன் காரணம் என்று கூறினால் அது மிகையாகாது. இத்தகைய முயற்சியில் வேறு பலரும் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் அடிப்படை எழுத்துக்களைத் தெளிவாக ஆராய்ந்து காணத் தவறியதாலும், அது வேதகாலத்துச் சமஸ்கிருதம் என்ற முன் கருத்துப் பிறழ்வாலும் அவர்களது ஆய்வுகள் முறையாக அமையவில்லை. மேலும், சிந்துவெளி மொழியை விளக்குவதற்குத் திராவிட மொழிகளின் இயல்பும், போக்கும், கருத்துக்களை நுணுக்கமாக வெளியிடும் அதன் ஆற்றலும் நன்கு அறிந்திருக்க வேண்டுவது இன்றியமையாத ஒன்று.

சிந்துவெளி மொழியின் எழுத்தமைதியும், தொடரமைப்பும் தமிழ் போன்ற ஒரு திராவிட மொழியை எழுதுவதற்காகவே அவ்வெழுத்துக்கள் வடிவமைக்கப் பெற்றமையைத் தெளிவாக

உணர்த்துகின்றன. எழுத்தமைதி குகைக்கல்வெட்டு எழுத்தமைதியை ஒத்துள்ளது. ஒரு மெய்யை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் மீது உயிர்க்குறியீடுகள் இட்டு, உயிர் மெய்யாக்கலாம். எடுத்துக் காட்டாக Y போன்ற வடிவம் னகரமெய்யாகும். இதன் V போன்ற பகுதியில் உள்ளே ஒன்று, இரண்டு, மூன்று எனறு கோடுகள் இட்டு ன - னா - னி என்று மாற்றலாம். அதுபோல, 7 என்ற வடிவத்தில் உள்ளது ரகரமெய். அதன் உட்புறம் சீப்புப் போல, ஒன்று, இரண்டு, மூன்று என்று கோடிட்டு ர-ரா-ரி என்று மாற்றலாம். திரு எஸ். ஆர். இராவ் இந்த ரகர மெய்யையும், அதன் உயிர் ஏற்ற வடிவங்களையும் அறியாது, சீப்பை நிற்கவைத்தது போலிருக்கும் (ரி - ரய்) இந்த எழுத்தை ஒத்த செமிட்டிக் மொழி வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு, அவ்வெழுத்துக்களுக்கு - அதனுள் உள்ள கோடுகளின் எண்ணிக்கையை ஆராயாது - செமிட்டிக் ஒலிப்பான = h என்ற ஒலியை அமைக்கிறார்[3]. இது, அந்த எழுத்தின் நுணுக்கத் தன்மையை உணராதக் காரணத்தினாலேயே ஆகும். பழங் காலத்தில் வழங்கிய மொழிகளில் உள்ள ஒத்த எழுத்து வடிவங்களை மட்டும் கொண்டு, அதன் ஒலி நிலையை அமைப்பது தவறாகும். பல மொழிகளில் எழுத்து வடிவம் ஒத்திருப்பினும் ஒலி மாறுபட்டிருக்கும் என்பதை நிபுணர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்[4].

ஒரே மொழியில் கூட இம்மாறுபாடு காலப் போக்கில் நிகழும். தமிழைப் பொறுத்தவரையில், I> என்று சிந்துவெளி முத்திரைகளில் காணும் இகரம், பின்னர் குகைக் கல்வெட்டுகளில் எகர எழுத்தாக உள்ளது. மூலத்திராவிட மொழிக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் இடையே இகர எகரங்கள் பெற்றுள்ள தொடர்பு பற்றி மொழியியலார் நன்கு ஆராய்ந்துள்ளனர். மீட்டுருவாக்கக் கொள்கை அடிப்படையில், மூலத்திராவிட மொழியை ஆராய்ந்து பெற்ற முடிவுகள், மூலத்திராவிட இகரமும் எகரமும் மூலத்தென் திராவிடத்தில் எகரம் என ஒன்றாகிவிட்டன என்று திரு Bh. கிருஷ்ணமூர்த்தி விளக்குகின்றார்[5]. இது ஒலி நிலையில் மட்டுமின்றி வடிவநிலையிலும் ஏற்பட்ட மாற்றத்துக்குக் காரணமாகுமோ என்ற ஐயம் எழுகின்றது.

மேற்கூறிய பிழைகளுக்குக் காரணம் சிந்துவெளி மொழியை ஆராய்ந்தவர்கள் அதன் வரிவடிவத்திற்கு அடிப்படையான எழுத்து வடிவங்களைக் கண்டறியத் தவறியதே எனலாம். மேலும், சிந்துவெளி மொழி எழுத்தொலியன்களால் ஆனது என்பதைவிட அது படவெழுத்துக் களாலும், குறுயீடுகளாலும் அமைக்கப்பெற்ற மொழி என்று அறிஞர்கள் பலரும் கருதி வந்ததே அத்தகைய ஆய்வுகளுக்குத் தடையாக அமைந்தது என்று கருத வேண்டியுள்ளது.

வடிவங்களில் ஒப்புடையவற்றை ஒழுங்குபடுத்தி, வரிசைமுறைப்படித்தொகுத்து, ஒவ்வொரு தொகுதியிலும் ஒத்தவை எவை, சற்றே மாறுபடுவன எவை என்று பகுத்தாராய்ந்து பார்க்கும்போதே, அடிப்படையாக இருந்து வடிவங்களில் பயின்றுவரும் குறிகள் எவை, எழுத்துக்கள் எவை என்று உணர முடியும். ஒரு குறியானது கூட்டெழுத்துக்களில் எவ்வாறு அமைகிறது தனியாகவரும்போது அது சொற்களில் எவ்வாறு உள்ளது என்பதை அடுத்து ஆராய வேண்டும்.

எடுத்துக் காட்டாக ஒரு மனிதன் கைகளைத் தூக்கியபடி நிற்பது போன்ற கூட்டெழுத்துக்களை எடுத்துக் கொள்வோம். இதன் மீது விளிம்புடைய கிண்ணம் போன்றும், பக்கங்களில் வளையங்கள் தொங்குவது போன்றும் வடிவங்கள் உள்ளன. இத்தகைய வடிவங்கள் பல உள்ளன. அவற்றின் பிற பகுதிகளை நீக்கிவிட்டால் ⅄ போன்ற வடிவம் மிஞ்சுகிறது. இத்தகைய வடிவம் இரண்டு தொகுதிகளில் கிடைக்கின்றது. அடுத்து இவ்வடிவம் இதே வடிவில் தனி எழுத்தாக அமைவதை ஒப்பிடுகின்றோம். அப்போது ⅄ போன்ற வடிமுவம்

இவ்வடிவின் மேல் கோட்டில் குறுக்குக் கோட்டுடன் சிலுவை போன்ற † வடிவமுமாக இரண்டு வடிவங்கள் கிடைக்கின்றன.


 = த் — க்

படம்—7

என்ற வடிவங்களாகும். முதல் வடிவத்தையும், இரண்டாவது வடிவத்தையும் ஒப்பிட்டு, இரண்டாவது வடிவம் முதல் வடிவத்தின் உயிர்க்குறியீடு ஏற்ற வடிவமாகக் கொண்டால், இரண்டாவது வடிவில், அதன் தூக்கிக் கொண்டிருக்கும் கைகளில் ஒன்றும் இரண்டுமாகக் கோடுகள் பெற்ற நிலையில் வடிவங்கள் உள்ளன. இவ்வாறே முதல் வடிவின் விரிந்த கால்களுக்கு இடையேயும், இடதுபுறம் கால் பிரியும் இடத்திலும் கோடுகள் பெற்ற வடிவங்களும் உள்ளன. படம் காண்க: (படம்—8)

(1) = ஆதவ்வ — த — த — த்

(2) = ஆகாவ்வ— கா — க — க்



குறியீட்டுக் கோடுகளை நீக்கினால் ⅄ என்றும், மனிதன் கைகளைத் தூக்கிக் கொண்டிருப்பது போன்றும் இரண்டு தனித்தனி வடிவங்கள் கிடைக்கின்றன. இவ்விரு வடிவங்களும் அடிப்படை எழுத்துக்கள் என்று தீர்மானமாகிறது. இரண்டாவது வடிவத்தின் குறுக்கே இடப்பெறும் கோடு, இரண்டு வடிவங்களிடையேயும் வேற்றுமைப்படுத்துவதற்காகவே என்றும் அறியலாம். முதல் வடிவம்: த். இரண்டாவது வடிவம்: க்.

த், க் — எழுத்து வடிவங்களைக் குகைக்கல்வெட்டு எழுத்துக்களும் உறுதி செய்கின்றன. இவ்விரு எழுத்து வடிவங்களுமே குகைக்கல்வெட்டுக்களில் உள்ளன. தகரமெய்யின் இரண்டு வடிவங்கள் குகைக்கல்வெட்டுகளில் அப்படியே உள்ளன. ககரமெய் சற்று வேறுபாட்டுடன் கீழுள்ள கால் ʌ இல்லாமல் † என்ற வடிவில் உள்ளது. த் - க் இவற்றிடையே சிறு வேறுபாடே சிந்துவெளி மொழியில் காணப்படுகின்றது. இன்றைக்கும் தமிழ் மொழியில் த் — க் என்ற எழுத்துக்களிடையே சிறு வேறுபாடே உள்ளதனை நாம் அறிவோம். மேற்கண்ட நுணுக்கமான வேறுபாடுகளைப் போன்று, சிந்துவெளி எழுத்துக்களில் பல நுணுக்கமான வேறுபாடுகள் உள்ளன. அவற்றை ஊன்றி உணர்வது இன்றியமையாதது.

எழுத்துக்களை ஆழ்ந்து ஆராய்ந்தவன் என்ற முறையில் வேறொன்றினை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வடமொழியில் உள்ள p - b, k - g, t - d, d, h போன்ற எழுத்துக்கள் சிந்துவெளி மொழியில் இருப்பதாகவும், தமிழில் இத்தகைய எழுத்துக்கள் இல்லையாதலால், அம்மொழி தமிழல்ல என்று எஸ். ஆர். இராவ் கூறுகிறார். மேலும், மனித வடிவம் r = ரு என்ற சமஸ்கிருத எழுத்து என்றும், இவ்வெழுத்தும் தமிழ் உயிரெழுத்து வரிசையில் இல்லையாதலால், சிந்துவெளி மொழிக்கும் தமிழுக்கும் தொடர்பிருக்க முடியாது என்றும் கூறியுள்ளார்[6]. ஆனால், அது உண்மையல்ல. சமஸ்கிருத வர்க்க எழுத்துக்களோ, ரு என்னும் அரையுயிர் ஒலியனோ சிந்துவெளி எழுத்தில் இல்லை. இதைக் கற்போரே உணரலாம்.

சிந்துவெளி எழுத்துக்களில் சில ஓவியங்களும், எண்களும் உள்ளன. அவற்றை இங்கே கூறாது விடுதல் தவறாகும். படங்கள் பெரும்பாலும், தங்கள் பெயரை ஒத்த சொற்களின்

பதிலிகளாகவே வருகின்றன. எடுத்துக் காட்டாக அரசிலை, அரசிலை என்பதை உணர்த்தாமல், அரச என்ற தனது மரச்சிறப்புப் பெயரையே உணர்த்த வந்தது. எனவே அரச (இலை) + ன் = அரசன் என்ற வடிவம் கிடைக்கிறது. எண்களும் அவ்வாறே. இரண்டு என்ற எண் இரு – இர என்ற சொல்லை உணர்த்த வருகின்றது. இதனால் II + ளன் = இருளன் என்ற பெயர் எளிதாக எழுதப்படுவதைக் காணலாம். இது இவ்வாறு இருக்க; இதுபற்றிக் கூற வந்த எஸ். ஆர். இராவ், சிந்துவெளி மொழியில் எண்கள் உண்டு, தமிழ்ல் இல்லை என்றும், ஆனால் சிந்துவெளி மொழிபோல சமஸ்கிருதத்தில் எண்கள் உள்ளதால், அம்மொழி சமஸ்கிருதமே என்று கூறுகிறார்[7]. இது தமிழைப் பற்றிய அறியாமையால் வந்த முடிவாகும். ஒன்று, இரண்டு என்று கோடுகள் இட்டு எழுதுவது பண்படா காட்டுமிராண்டி மொழிகளில் கூட உண்டு. சங்க கால நூல்களில் கூட இத்தகைய எண்ணும் முறை பற்றி உள்ளது. தலைவனைப் பிரிந்த நாட்களை எண்ண, சுவரில் விரல்களால் கோடுபோட்டு வைக்கிறாள் தலைவி என்று ஒரு புலவர் பாடுகிறார்.

மேற்கண்ட எல்லா கேள்விகளுக்கும், நீண்ட நாளாக அறிஞர்களிடையே நிலவிய கருத்துக்களுக்கும் இவ்வாய்வு ஒரு பொருத்தமான விடையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இப்பணி ஒரு பெரிய நிறுவனமோ, நிபுணர்கள் குழுவோ ஏற்றுச் செய்ய வேண்டிய ஒன்று. தனி ஒருவனாக நின்று — ஒரு மனிதன் தன்னால் ஆற்ற முடிந்த அளவில் இதனைச் செய்துள்ளேன். இந்நூலுக்காக 2500 முத்திரைகள், மற்றும் சிந்துவெளி எழுத்து வடிவங்கள் ஆராயப்பெற்று, அவற்றுள் எழுத்துச் சிறப்பு, பொருட் சிறப்பு என்ற அடிப்படையில் 450 முத்திரைகள் மட்டும் தொகுக்கப் பெற்றுள்ளன. இவை முதற் பகுதியாக இந்நூலில் இடம் பெறுகின்றன.

குறிப்புகள்

1. Rao. S. R., Lothal, A Harappan Port Town (1955 - 62), A, S. I. New Delhi (1979), P. 267.
2. அதே நூல், பக் 170.
3. அதே நூல், பக். 175, Fig. ‹9.
4. Chadwick, John, The Decipherment of Linear B., IInd Edn, 1967, P 26.
5. Krishnamurthi, Bh., Telugu Verbal Bases (1958), P. 112.
6. S. R. Rao எழுதிய அதே நூல், P. 179, 182.
7. அதே நூல், P. 182.

2. ஒலியன்கள் அமைத்தல்

கண் முன்னே இருக்கும் பல்லாயிரம் குறிகளுக்கும் குறியீடுகளுக்கும், படங்களுக்கும் எவ்வாறு ஒலியன் மதிப்பளிப்பது என்பது, 10 ஆண்டுகளுக்கு முன் என் சிந்தையை வருத்திக் கொண்டிருந்த ஒரு கேள்வி. என் ஆர்வத்தைக் கிளறி, சிந்துவெளி மொழியைப் படிக்கத் தூண்டியதும், என் வேத நூல் என்று நான் கருதியதுமாகிய ஜான் சாடுவிக் எழுதிய லைனர் B (1967) என்ற நூல், நான் தளர்ந்துபோன நேரத்தில் எல்லாம் புத்துணர்வூட்டும் அருமருந்தாக இருந்தது. மேலும், கி. மு. 3ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த தமிழ் பிரம்மி எனப்படும் குகைக் கல்வெட்டுக்கள் சில என்னிடம் இருந்தன. அவற்றில் காணப்பெறும் எழுத்துக்களுக்கும் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் இடையே தொடர்பிருப்பதை உணர்ந்திருந்தேன்.

இந்த ஒற்றுமை, சிந்துவெளி முத்திரையில் உள்ள எழுத்துக்களுக்கும் வெவ்வேறு மாறுபட்ட ஒலி முறைகளை அளித்துச் சோதித்துக் கொண்டு இருக்கும்போது உணரப்பட்டதாகும். குகைக் கல்வெட்டுகளில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களை வரிசைப்படுத்தி, அதற்கு எதிரே அதனை ஓரளவு ஒத்திருக்கும் சிந்துவெளி வடிவங்களை எழுதி ஒலியூட்டிப் பார்ப்பது என் முயற்சியாக இருந்தது. பல ஆசிரியர்கள் இவ்வாறு ஒத்த வடிவங்களைத் தொகுத்து அவற்றிற்கு ஓர் அனுமானத்தின் பேரில் ஒலியமைத்து நூல்கள் வெளியிட்டுள்ளனர் என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒலிநிலை அறியாது, எழுத்துமுறை அறியாது, வடிவ ஒற்றுமை ஒன்றே வரிசைப்படுத்துகின்ற முயற்சிக்குக் காரணமாக இருந்தது. ஒரு பழங்கால மொழியின் எழுத்துக்களை இவ்வாறு தொகுத்து எழுதுவது ஒரு பயனற்ற வேலை என்பதை அறிந்திருந்தாலும் அதற்காக முயற்சியைக் கைவிடும் மனமும் இல்லை. சிந்துவெளி எழுத்துக்கள் உயிர்மெய்வகை எழுத்துக்கள் என்ற எண்ணமும் இருந்தது. உயிர்மெய்வகையில் ஒரு வடிவம் ஓர் உயிர்மெய் ஒலிக்கு உரியதாக இருக்கும். இந்த எழுத்துக்களும் அவ்வாறே தனித்தனி வடிவங்களாக விளங்கின. அவ்வாறு, பலநூறு வடிவங்கள் உள்ளன. ஆனால், இந்த முயற்சியில் பயன் ஏதும் ஏற்படவில்லை.


இடையிடையே, எஸ். ஆர். இராவ், பேரா. பங்க பிகாரி சக்ரவர்த்தி போன்ற நிபுணர்களின் நூல்களில் அவர்கள் காட்டிய ஒலிநிலைகளை முத்திரை எழுத்துக்களுக்கு அளித்து, படிக்கும் முயற்சியையும் மேற்கொண்டேன். எழுத்துக்களை இணைத்து அவற்றைப் படிக்கும்போது, தன் விருப்பத்திற்கேற்ற பொருள் அமையுமாறு உயிரெழுத்துக்களை இட மாற்றம் செய்வதும், செயற்கையாகப் பொருள் காண்பதும் ஏற்க முடியாததாக இருந்தது. எஸ். ஆர். இராவ் செமிட்டிக் மொழி எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, சிந்துவெளி முத்திரைகளுக்கு விளக்கம் சொன்னபோது அவரது அணுகுமுறை சரியென்று பட்டது. ஆனால், முத்திரைகளுக்கு அவர் காட்டிய விளக்கம் ஒன்றுமே இல்லை என்ற அளவிலேயே இருந்தது.

என்றாலும், அவர் அ, ஆ, அய், அவ் என்ற நான்கு உயிரெழுத்துக்களையும் சரியாகவே இனங்கண்டு அறிவித்திருப்பதாகவே நம்பினேன். ஏனெனில், நானும் அ, ஆ என்ற இரண்டு எழுத்துக்களையும் சிறிது காலமாக அறிந்திருந்தேன். குகைக் கல்வெட்டுக்களுடன் தொடர்பு கொண்ட எழுத்து என்று கருதி வந்த சில எழுத்துக்களின் அடிப்படையில், மேற்கண்ட

உயிரெழுத்துக்களுடன் இணைத்து அக், ஆக், ஆத் போன்ற சொற்களை நான் முன்பே அறிந்திருந்தேன். சிந்துவெளி முத்திரை ஒன்றில் நான் கண்ட எழுத்தமைதியே அகர, ஆகாரங்களை நான் அறிவதற்குக் காரணமாயிற்று. அந்த எழுத்து (ஆ) ஒரு பசு மாட்டின் (ஆ) தலையமைப்பை ஒத்தியிருந்தது. குகைக் கல்வெட்டின் அகரமும்இதனைப் போன்றிருந்தது.

சி.வெ:

கு.க:



ஆ—அ
படம்: 9

சிந்துவெளி எழுத்து நேராகவும், குகைக்கல் வெட்டு எழுத்து பக்கவாட்டிலும் அமைகின்றன. அதன் காதுகளின் இருபுறமும் கோடுகள் இட்டு நிமிர்த்தி வைத்தால் சிந்துவெளி எழுத்தை ஒத்திருக்கும்.

இவ்வெழுத்தே, விளிம்புடைய கிண்ணம் போன்று பல இடங்களில் அமைந்துள்ளது. எண்களை அடுத்து இவ்வெழுத்துக் காணப்பெற்றதால், அது ஒரு பொருளையோ, உயிரினத்தையோ குறிப்பதாகக் கருதி வந்தேன். மேற்கண்ட எழுத்தமைதி அது ஆ - ஆன் என்று குறிப்பதாகக் கொண்டேன். மேல் விளிம்பில் இரண்டு கோடுகளும், ஒரே கோடும் பெற்ற வடிவங்கள் இருந்தன. எனவே, இவை இரண்டும் வெவ்வேறு எழுத்துக்கள் என்றும் மேற்கோடுகளின் எண்ணிக்கையைக் கருதி அ - ஆ என்று முடிவு செய்திருந்தேன். இவ்வெழுத்தை ஆராய்ந்த திரு எஸ். ஆர். இராவ் இதனைச் செமிட்டிக் மொழி எழுத்தின் அடிப்படையில் அமைத்திருந்தார். செமிட்டிக் வடிவமும் குகைக்கல்வெட்டு வடிவமும் அமைப்பில் ஒத்துக் காணப்பெறுவதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

குகைக்கல்வெட்டு எழுத்துக்கள் பல சிந்துவெளி எழுத்துக்களை ஒத்திருப்பதைப்பற்றி நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். இவ்வெழுத் தொற்றுமையைக் கருதி, வெவ்வேறு மொழிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதைவிட, குகைக்கல்வெட்டுக்களின் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வைத் தொடர்வது என்று, 1984ஆம் ஆண்டு முடிவு செய்தேன். அதே சமயம், சிந்துவெளி எழுத்துக்கள் தொடர்பாக ஒருசில கருத்துக்களும், அடிப்படைகளும், ஒலியமைப்புக்களும் ஆய்வுகளின் முடிவில் கருக்கொள்ளத் தொடங்கி இருந்தன. அவற்றுள் ஒரு கருத்தாக, நான் கொண்ட முடிவின் அடிப்படையில், தனி எழுத்து வடிவங்களும், அந்தத் தனி எழுத்துக்கள் கூட்டெழுத்துக்களில் அமையும் முறைகளும் ஒரு தொடர்பினைப் பெற்றிருப்பதால், ஏறக்குறைய ஒரே எழுத்து என்று நினைத்தவற்றைத் தொகுக்கும் வேலையைத் தொடங்கினேன்.


இவ்வாறு, முதலில் 464 முத்திரைகளில் இருந்தும், பின்னர் 824 முத்திரைகளில் இருந்தும், தனி எழுத்துக்களையும், வடிவத்தில் ஒத்த கூட்டெழுத்து வடிவங்களையும் தொகுத்தேன். தொடர்ந்து, கூட்டெழுத்துக்கள் ஒவ்வொன்றையும் பகுதி பகுதியாகப் பிரித்து அவற்றின் அடிப்படை எழுத்துக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டேன். இப்பணியைப் பல ஆண்டுகள் தொடர்ந்து மேற்கொண்டேன். ஒவ்வொரு வடிவமும் வெவ்வேறு வகையாகப் பிரித்துப் பார்க்கப்பெற்று, பிற தனி எழுத்துக்களுடன் ஒப்பிட வேண்டியதாயிற்று. இந்த முயற்சி வெற்றியைத் தரும் என்பதற்கான நல்ல அறிகுறிகள் தோன்றின. என் ஆய்வுமுறை மிகச் சரியான பாதையில் செல்கிறது என்று அன்றே நம்பிக்கை தோன்றியது.

வடிவங்களுக்கு ஒலியூட்டும் முயற்சியின் இரண்டாவது கட்டம் பின்னர் தொடங்கியது. ஒத்த வடிவம் கொண்ட சிந்துவெளி எழுத்துககளும், குகைக்கல் வெட்டு எழுத்துக்களும், அவற்றிடையே காணப்பெற்ற வடிவ ஒற்றுமை என்ற ஒரே அடிப்படையில் அதே ஒலிநிலைகளில் அமைக்கப்பட்டன. வருமாறு.

படம்: 10

சி.வெ:

கு.க:



க் - ட் - த் - ற் - ய் - வ் - ப்

இவ்வாறு அமைந்த ஒலிகளின் அடிப்படையில் முதலில் தனி எழுத்துக்கள் அடங்கிய முத்திரைகளும், சொற்களில் பகுதிகளாக விளங்கிய தனி எழுத்துக்களால் ஆகிய சொற்களும் நன்கு ஆராயப் பெற்றன. அப்போது, அக்த், ஆட், ஆக், அக். ஆய், தவ் அய, ஆ இரவ்வ, வட்ட, ஆதற் என்பன போன்ற சொற்களும், சொற்பகுதிகளும் படிக்கப் பெற்றன. இவற்றை அக்த் = அகத், ஆட் = ஆட, வட்ட் = வட்ட, ஆத்ற், ஆதற் என்று படித்தபோது சொற்கள் பொருள் பொதிந்தனவாகத் தெரிந்தன ஆட அகத் ,வட்ட, ஆத, ஆதற் போன்ற சொற்கள் திராவிட மொழி ஒன்றிற்கே உரியன என்றும், திராவிடமொழியாகையால் தமிழுடன் தொடர் புடையது என்றும் தெளிவானது. அடுத்து, எழுத்துக்கள் அவை சொற்களில் உள்ளவாறே ஒலிநிலை பொருள் நிலைக்கே கற்ப அமைவதையும்உண ர முடிந்தது.

மேலும், இங்கே இன்னொரு தொடர்பான செய்தியையும் கூற வேண்டும். இந்த நிலையில்தான் ஒலிநிலை, வடிவம் பற்றிய ஆய்வுகளோடு அவற்றின் உள்ளமைப்பு, அல்லது இலக்கணத் தொடர்பான சிக்கல்களை ஆராய வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. மேலே எடுத்துக் காட்டிய முத்திரைச் சொற்களில், அக்த் = அகத், ஆத்ற் = ஆதற், வட்ட் = வட்ட என்று, இடையிலும், இறுதியிலும் மெய்கள் உயிரேற்கின்றன — இது ஏன்? அக்த், ஆத்ற் என்பன அகத், ஆதற் என்றும், வட்ட் என்பதை வட்ட என்றும் படிக்க வேண்டும். எனவே, முதல் இரண்டு சொற்களில் இடையிலும், மூன்றாவது சொல்லில் இறுதியிலும் உள்ள ஈரொற்றுக்களில் ஒன்று உயிர் ஏற்று வருகிறது. இத்தகைய, ஒரு வரன்முறைக்கு உட்பட்ட மாற்றம் எவ்வாறு நிகழ்கிறது என்ற கேள்வி என்னுள் எழுந்தது. இக்கேள்விக்கு உரிய விடை பின்னர் ஆராய்ந்து பெறப்பட்டபோது, சிந்துவெளி மொழியாய்வில் அது ஒரு மகத்தான செயல் என்று உணர்ந்தேன். அதனால், என் ஆய்வுகள் தீவிரமடைந்ததோடு, ஒரு நிர்ணயமான திசையில்செல்லத் தொடங்கின. இனி, தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டே என் ஆய்வைத்தொடர வேண்டும் என்பது உறுதியான தீர்மானமாயிற்று.

ஒரு சமயம் படவெழுத்துக்களைத் தொகுத்துக் கொண்டிருந்தபோது, கழுகு அல்லது காகத்தின் படத்தருகே Y என்ற எழுத்தும், அரசிலைக்குப் பக்கத்தில் —|> என்ற எழுத்தும் எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்க நேர்ந்தது. இப்படங்களின் பெயர்களைக் கழுக - ன், அரச-ன் என்று பின்னெழுத்துக்களுடன் இணைத்துப் பார்த்தபோது, மேற்கூறிய இரு எழுத்து வடிவங்களும் னகரமெய்யின் வடிவங்களே என்று தோன்றியது. பெரும்பாலும் இவ்விரு எழுத்துக்களும் சொல்லிறுதியில் அமைவது இக்கருத்துக்கு வலுவூட்டியது.

ஆத் என்னும் சொல்லசையை ஒட்டி ஆங்கில Y போன்ற வடிவத்தின் மேற்புற V என்ற அமைப்பிற்குள் மூன்று கோடுகள் பெற்ற எழுத்து ஒன்றும் காணப்பெற்றது. அதன் Y வடிவம் னகரமெய்யானால், அதன் மேற்புறம் அமைந்திருக்கும் கோடுகள் உயிர்க்குறியீடுகளாகவே இருக்க வேண்டும். லைனர் B எழுத்துக்களில் இத்தகைய வடிவுடைய எழுத்தொன்று உயிர்க்குறியீடுகள் பெற்றிருப்பதும் அதன் ஒலிநிலையை னி (ni) என்று அமைத்திருப்பதும் நினைவிற்கு வந்தது. எனவே, இவ்வடிவம் னகரமெய்யின் உயிர்க்குறியீடு ஏற்ற வடிவம் என்பது உறுதி. இப்போது, மெய்களின் மீது இடப்பெறும் உயிர்க்குறியீடுகள் பற்றி ஆராய வேண்டிய நேரம் என்று தோன்றிற்று. அத்தகைய எழுத்துககள் தொகுக்கப்பட வேண்டும். சோதனை முயற்சியாக க்-த்-ய்-வ்-ன் என்று உணரப்பெற்றிருந்த ஐந்து மெய்யெழுத்துக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

எடுத்த எடுப்பிலேயே, ககரமெய் ஒன்று-இரண்டு என்று கோடுகள் பெற்று, சொற்களில் ஆக-ஆகா என வழங்குவதையும், அதன் அருகில் 7 போன்ற வடிவத்தில் காண்பது, குகைக்கல்வெட்டுக்களில் | என்று கோடுபோலவும், மேற்புறம் சிறு கோடு அமைய 7 போலவும் உள்ள ரகரமெய்யே என்ற உண்மை அறியப்பெற்றதுடன், அவ்விரு சொற்களும் ஆகர், ஆகார் என்று படிக்கப்பட்டன. இரட்டிப்பு மகிழ்ச்சி. உயிர்க்குறியீடுகள்: ஒரு கோடு=அ, இரண்டு=ஆ, மூன்று=இ என்ற விளக்கம் கிடைத்த மகிழ்ச்சி ஒன்று. இரண்டாவது, ரகர மெய்யை அறிந்து கொள்ள முடிந்தது. பின்னர், தொடர்ந்து மேற்கொள்ளப் பெற்ற ஆய்வுகளில் ரகரமெய்யின் வேறுசில வடிவங்களும், உயிர்க்குறியீடுகள் பற்றிய மேலும் பல செய்திகளும் விளக்கமாயின.


எனவே, ஆத் என்ற அசையைத் தொடர்ந்து வரும் எழுத்தை 'னி' என்றும், இச்சொல் ஆத்னி (210) என்றும் உணரமுடிந்தது. இதனால் 'கந்தனி' என்ற (147) அரியதொரு சொல் படிக்கப்பட்டது. முதலில், 'கன்த்னி' என்றும், பின்னர் கந்தனி என்றும், படித்தேன். இங்கு, னகரமெய், நகரமெய்க்குப் பதிலியாக வருகிறது. இந்த நகரமெய்யானது குகைக்கல்வெட்டுக்களில் ⊥ என்ற வடித்தைப் பெற்று விளங்குகிறது. இவ்வடிவத்தில் இருந்தே Γ என்ற னகரமெய் உருவாக்கப்பட்டது என்று ஆய்வாளர் பலரும் கூறியுள்ளனர். அதாவது, னகரம் தமிழ் மொழியின் சிறப்பெழுத்தாகையால், அந்த எழுத்துப் புதிதாக உருவாக்கிக் கொள்ளப்பட்டதாகக் கொள்ளுவர். இதுபற்றிப் பின்னர் காணலாம். ஆனால், சிந்துவெளியில் நகரம் னகர,ணகர எழுத்துக்களின் வடிவங்களைக் கொண்டே எழுதப்பெறுவது ஆய்வுகளில் நன்கு விளக்கமாயிற்று.

இப்போது, என் கருத்தோட்டம் உறுதிப்படுத்தப்பட்டது. இதுவரையில் பார்த்த எழுத்துக்களும், சொற்களும் தமிழ் எழுத்துககளே, சொற்களே. மேலும், சிந்துவெளி மொழி எத்தகையதாயினும், தமிழ் எழுததொலிகளால் அதற்கு உயிரூட்ட முடியும் என்பது தெளிவு. எனவே, தமிழை அடிப்படையாகக் கொண்டு ஆய்வது என்ற எனது முடிவே சரியானது. அவ்வழியிலேயே மேலும் தொடர வேண்டும். பல அடிப்படை எழுத்துக்களும் உயிர்க்குறியீடுகளும் கண்டுபிடிக்கப் பெற்றது சிந்துவெளி எழுத்துகளைப் படிப்பதை விரைவுபடுத்திற்று. இதனால், மேலும் பல முத்திரைகள் மொழிமாற்றப் பெறுவதும், பொருளுணர்வதும் எளிதாயிற்று. ஈரொற்றுக்கள் சொல்லிடையில் வருமேயானால் இரண்டாவது எழுத்தும், அவை சொல்லிறுதியில் வருமேயானால் முதல் எழுத்தும் உயிரேற்றதாகக் கொள்ள வேண்டும் என்பது போன்ற விதிமுறைகளை அறிய முடிந்தது.

மகரம் மூன்று வடிவங்களையும், சகரம் 2 வடிவங்களையும் பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு குறிப்பிட்ட வடிவம் சிறிது மாறுபாட்டுடன் இரண்டு எழுத்துக்களிலும் உள்ளது. இதனை அறிய எது சகரம் எது மகரம் என்று காண, முயற்சித்த நாட்கள் பல. ஆனால், இச்சிக்கல் பின்னர் குகைக்கல்வெட்டுக்களின் அடிப்படையிலேயே தீர்க்கப்பட்டது. குகைக்கல்வெட்டுக்களிலும், சிந்துவெளி முத்திரைகளிலும் வகரம்வட்டமாகவும், பகரம் சதுரவடிவிலும் எழுதப்படுவதால், இவற்றிலிருந்து மகரத்தின் வடிவத்தினைப் பிரித்துக் காட்ட வட்டமும் இல்லாமல் சதுரமும் இல்லாமல், ஓர் இடைப்பட்ட வடிவ நிலையினை அமைத்துள்ளனர். அரைவட்டமாகவும் அதன் வலதுபுறம் ஒன்று இரண்டு கோடு களுடன் ஒரு வடிவமும், நீள்வட்டத்தில் மேலும் கீழும் வலது புறம் இரண்டு கோடுகள் வருமாறு ஒரு வடிவமும், டைமன் வடிவமுமாக பல வடிவங்களில் உள்ளன. அதுபோல சகரம் முக்கோண வடிவின்வலதுபுறம் < போன்ற ஒரு கொம்புடனும், நீள்வட்டத்தின்வலதுபுறம் அதே < போன்ற கொம்புடனும், இன்னொரு வடிவமுமாக இரண்டு வடிவங்களைப் பெற்றுள்ளது. இவ்விரு வடிவங்களும் குகைக்கல்வெட்டுக்களிலும் உள்ளன. ஒரு வடிவம் மட்டும் முக்கோணத்தில் இருந்து சற்றே மாறுபடுகிறது. கீழ்க்கண்ட படம் காண்க; (படம்:11)

கு.க:

சி.வெ:



ம் - ச் - வ் - ப்

படத்திலுள்ள மேற்கண்ட எழுத்துக்கள் மிக நுணுக்கமான வேறுபாடுகளைக் காட்டு கின்றன. மகரமும், சகரமும் அடிப்படை உருவ அமைப்பில் எப்படி இருந்தாலும், அவற்றின் பக்கக் கொம்புகளைக் கொண்டு இரண்டு எழுத்துக்களையும் வேறுபடுத்தி அறியலாம். மகரம் நீள்வட்டமும், வலதுபுறம் < போன்று சற்றே மேலும் கீழும் விலகிய நிலையில் இரண்டு கோடு களைப் பெற்றுள்ளது. அதுபோல, சகரம் நீள் வட்டமும், அதன் வலதுபுறம் < போன்ற கொம் பையும் பெற்றுள்ளது. மேலே உள்ள படத்தில் மகரத்தையும், சகரத்தையும் ஒப்பிட்டுக் காணுங் கள். சற்றே விலகியும் இணைந்தும் உள்ள இக்கொம்புகளின் அமைப்பைக் கொண்டு மகர, சகர எழுத்துக்களைக் கண்டறியலாம்.

மேலே உள்ள படத்தில் பகரம் சதுரமாகவும், வகரம் வட்டமாகவும், மகரம், இரண் டிற்கும் இடைப்பட்ட வடிவிலும் அமைந்துள்ளதைக் காணலாம். வடிவ அமைப்பில் இவற்றி டையே ஒரு தொடர்பு காணப்பெறுகிறது. இம்மூன்று எழுத்துக்களின் அமைப்பிலும் ஓர் அடிப் படை நியதி உள்ளது. இதனை ஆராய்ந்து காண வேண்டியது இன்றியமையாத ஒன்று.


மகரமும், மகரமும் பிறப்பு முறையால் இதழுடன் தொடர்புடைய எழுத்துக்களாகும். இவற்றை ஈரிதழ் ஒலியன்கள் என்பர் மொழியியலார். பகர மகரம் இதழியைப் பிறக்கும் என்பார் தொல்காப்பியர்[1]. ஆனால், வகரம் பல்லிதழ் ஒலியன்; பல்லும் இதழும் இயைய வகரம் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுவார்[2]. வகரமும் இதழுடன் தொடர்புடைய ஒலியனே. மேலும், இன்று நாம் வகரத்தைப் பல்லிதழ் ஒலியனாக ஒலித்துக் கொண்டிருந் தாலும், சிந்துவெளி மொழியில் வகரம் ஈரிதழ் ஒலியனாகவே காணப்படுகிறது. பகர மகரங்கள்

போலவே வகரமும் ஒலிக்சப்படுகிறது. இது வியப்பூட்டும் செய்தியாகும். எ—டு: கவ்வ என்ற சொல் (37) கவ்—வ என்றிருல்லாது க—வ்வ என்றே ஒலிக்கப் பெற்றிருக்கும் என்பது உறுதி. மொழியியல் அறிஞர்கள் மூலத்திராவிட மொழியில் வகரம் ஈரிதழ் ஒலியனாகவே இருந்தது என்று மீட்டுருவாக்கக் கொள்கையின் அடிப்படையில் நிறுவியுள்ளமையை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும்[3]. எனவே, இம்மூன்று எழுத்துக்களுமே ஈரிதழ் ஒலியன்களாக இருந்த காரணத்தால், இடைவெளி இல்லா வடிவங்களில், ஆனால், வேறுபாடு உணருமாறு இவ்வெழுத்துக்களை நன்கு அமைத்துள்ளனர். குகைக் கல்வெட்டுக்களில் இம்முறை காணப் பெறினும், பகரம் மட்டும் மேற்புறம் திறந்த நிலையில் காணலாகிறது.

மேலும், தமிழ் மெய்யெழுத்துக்களை வல்லினம், இடையினம், மெல்லினம் என்று வகுத்துள்ளனர். இவை, ஒலியழுத்த அடிப்படையில் அமைக்கப்பட்டவை. இதனடிப்படையில் பகரம் வல்லினம் என்றும், வகரம் இடையினம் என்றும், மகரம் மெல்லினம் என்றும் வகுக்கலாம். இதனை ப் — வ் — ம் என்று வரிசைப்படுத்தலாம். எனவே, பகரம் சதுரம்; வகரம் வட்டம்; மகரம் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட வடிவம் என்று நமது சிந்துவெளி முன்னோர்களால் அமைக்கப்பட்டிருந்தது என்று கருத வேண்டியுள்ளது. இவ்வாறு வகைப் படுத்தப் பெற்றமைக்கு அவ்வெழுத்துக்களின் ஒலிப்பு முறையே அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். வடிவங்களிடையே காணப்பெறும் தொடர்பிற்கும் இவ்வொலிப்பு முறையே அடிப்படையாக வேண்டும்.

சிந்துவெளி எழுத்துக்களான ப் — வ் — ம் — ச் என்பன, வடிவத்தில் குகைக்கல்வெட்டு எழுத்துக்களை ஒத்துள்ளதால், அவற்றிற்கு குகைக்கல்வெட்டு எழுத்து வடிவங்களுக்கு உரிய ஒலி நிலைகளையே அமைத்துள்ளேன். இவ்வெழுத்துக்களுடன், உயிர்க்குறியீடு அமையும் முறையும் விளக்கம் பெற்றதால் ஏறக்குறைய 65% எழுத்துக்கள் இனங்காணப் பெற்றதாகவே உணர்ந்தேன். இவ்வாறு பெறப்பெற்ற முடிவால், சிந்துவெளி எழுத்துக்களின் பிற்கால வடிவமே குகைக்கல்வெட்டு எழுத்துக்கள் என்ற உறுதியினை நான் பெற்றேன். இந்த அடிப் படையிலேயே குகைக்கல்வெட்டு ஒலிகள் சிந்துவெளி எழுத்துக்களுக்கு அமைக்கப்பட்டன.


இவ்வாறு, தெளிவான ஒப்புமை உடைய எழுத்துக்களில் ஒன்று ணகரமெய். குகைக்கல் வெட்டுக்களில் இது ⌶ என்று எழுதப்படுகின்றது. இன்னும் சற்று காலத்தால் பிற்பட்ட கல்வெட் டுக்களில் இது Z போன்ற வடிவத்தில் உள்ளது. இதனை எழுத்து வேறுபாடு என்றும், காலத்தால் ஏற்பட்ட வளர்ச்சி என்றும் கூறலாம். இதே வடிவமும், ஒலியும் (ண்) கொண்ட எழுத்துக்களுடன் சில பானையோடுகள் எகிப்தில் கெய்ரோ அருகில் செங்கடல் ஓரம் கியூசேயில் - அல் - கடிம் என்ற துறைமுகப் பகுதியில் அகழ்வாய்வுகள் செய்தபோது கண் டெடுக்கப் பெற்றன. இத்தமிழ் எழுத்துக்கள் கி. மு. 3-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. இங்கு வந்து தங்கிய தமிழ் வணிகர்களுக்கு உரியவை. அவற்றில் கணன் (கண்ணன்), சாதன் (சாத்தன்) என்பன போன்ற பெயர்கள் காணப் பெறுகின்றன. (படம்—12) :



கணன்

இன்னொரு பானையோட்டில் தகரமெய் ⅄ என்ற வடிவத்திலேயே, சிந்துவெளி எழுத்தைப் போலவே அமைகிறது[4].

இந்த எழுத்து வடிவத்தின் அடிப்படையிலேயே ணகரம் அறியப்பெற்றது. முத்திரைகளில் இந்த எழுத்து H போன்ற வடிவில் அமைந்துள்ளது. இதன் குறுக்குக் கோட்டில் தொங்குவது போல ஒரு கோடு போட்டால், 'ண' என்றும், இரண்டு கோடு, 'ணா', மூன்று கோடு, 'ணி' என்றும் கொள்ள வேண்டும். இதே எழுத்தை அடிப்படையாகக் கொண்டு, சதுரத்திற்குள் குறுக்குக்கோடு போட்டது போன்றும், பல கோடுகள் போட்டது போன்றும் வடிவங்கள் உள்ளன. நான்கு கோடுகளுடன் சீப்புப் போன்ற வடிவமொன்றும் உள்ளது. இவற்றிற்கு எல்லாம் H போன்ற வடிவமே அடிப்படை எனலாம். இந்த வடிவம் குகைக்கல்வெட்டில் I என்பது போன்று திரும்பிய நிலையில் உள்ளது. இவ்விரண்டு வடிவங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவை. கீழ்க்கண்ட படம் காண்க.



ண் - ண் - ண் - ண் - ண் - ணா
ண - ணா - ணா - ணா - ணா - ணா

படம்—13

இப்படத்தில் ணகரமெய், மற்ற ணகரவர்க்க எழுத்துக்களின் வடிவங்கள் காட்டப்படுகின்றன.

ணகரமெய், அதன் மற்ற வர்க்க எழுத்துக்களுக்குத் தனித்தனி எழுத்துக்கள் இருப்பது போல, ணகரம் கூட்டெழுத்தாக அமையும்போது அடையும் ஒரு வினோதமான மாறு பாட்டையும் இங்கே கூற வேண்டும். 'ணா' என்ற எழுத்து கூட்டெழுத்தாக அமையும்போது, ணாணா = ண்ணா என்றும், ணண = ண்ண என்றும் மாறி ஒலிக்கிறது. படம் காண்க:



யண்ண - யண்ணா - ண்ணா - ணா


படம் : (14)

மேற்கண்ட ணகரக் கூட்டெழுத்துக்களில், 3ஆம் வடிவம் இரண்டு எழுத்துக்களால் ஆனது. அவற்றைத் தனியே பிரித்தால் 4ஆம் வடிவத்தில் உள்ளவாறு இரண்டு எழுத்துக்கள் கிடைக்கும். இது, 'ணா' என்ற எழுத்தாகும். இவ்விரண்டு எழுத்துக்களும் ஒரு நேர்க்கோட்டில் ணா + ணா = ண்ணா என்ற (3) ஒலி நிலையில் இணைகின்றன. அடுத்து, இவ்வடிவம் ஒரு U போன்ற அகர அச்சில் இணைந்து வரும்போது, அகரமேற்ற வடிவம்போல, 'ண்ண' என்று ஒலி நிலையை அடைகிறது. அதன் மறுமுனையில் யகரமெய் நிற்க, 'யண்ண' என்று (1) ஒலிக்கின்றது. இரண்டாவது வடிவம், மேற்கண்டவாறு, 'ண்ணா'வும், யகரமும் இணைந்து, 'யண்ணா' என்றான வடிவம். எனவே, ணகரக் கூட்டெழுத்துக்கள் அகர அச்சில் இணைந்து வந்தால் 'ண்ண' என்றும், நேர்க்கோட்டில் இணைந்து வந்தால், 'ண்ணா' என்றும் அறியலாம். இக்கூட்டெழுத்து ஒலிமாற்ற முறையைப் படிக்க முடிந்ததே, அந்த எழுத்துக்கள் தொடர்பாகப் பெற்ற பெரிய வெற்றி என்று கருதுகிறேன். கூட்டெழுத்துக்களின் கூறுகள் பிரிக்கப்பட்டு, எல்லா எழுத்துக்களையும் படிக்க முடிந்ததும், இரண்டு ஒப்புடைய கூட்டெழுத்துக்களுக்கு

இடையே உள்ள நுணுக்க வேறுபாடு எதனால் என்று ஆராய்ந்ததும், எழுத்துக்களைப் பொருள் நிலையில் பொருத்திக் காண முடிந்ததுமே இவ்வெற்றிக்குக் காரணம்.

சிந்துவெளி மொழியில் னகரமெய் மூன்று வகையான வடிவங்களைப் பெற்றுள்ளது.

படம் : (15)



இவற்றுள் இரண்டு வடிவங்களை நாமறிவோம். குகைக்கல்வெட்டுக்களில் னகரமெய் 𑀦 போன்ற வடிவிலுள்ளது. இரண்டுவகை எழுத்துக்களுமே ஒரு நடுக்கோட்டின் அடிப்படையில் அமைந்தவை. இது இரண்டு எழுத்துக்களுக்கும் பொதுவானதாகவே உள்ளது. இவற்றுள் மூன்றாவது எழுத்து கிரீட் நாகரிக எழுத்தான லைனர் Bயின் NI என்ற ஒலியுடைய உயிர்மெய் எழுத்தை ஒத்துள்ளது என்றும், அதன் ஒலிநிலையும் அம்மொழியை அடிப்படையாகக் கொண்டே சரிபார்க்கப்பட்டது என்றும் முன்பே குறித்துள்ளேன். இந்நிலையில், குகைக் கல்வெட்டு வடிவம் பல நூற்றாண்டுகள் மேற்கொண்ட பயன்பாட்டின் காரணமாகப் பெற்ற வளர்ச்சி மாற்றமே எனலாம்.

னகர வரிசையில் இரண்டாவதாக உள்ள அம்புக்குறியைப் போன்ற எழுத்தும் னகரமெய்தான் என்று அறிந்ததே ஓர் இயல்பான ஆய்வு வளர்ச்சியின் பயனாகும். தமிழ்ச் சொற்களில் முதல் எழுத்து, இறுதி எழுத்துக்களைத் தொகுத்துக் கொண்டு பின்னர் அதையே மெய், உயிர்மெய் என்று வகைப்படுத்தி, இனங்காணப்பட்ட மற்ற எழுத்துக்களுடன் இணைத்து ஒலியூட்டியபோது இவ்வெழுத்து விளக்கமாயிற்று. இந்த எழுத்து பல சமயங்களில் நகரத்திற்குப் பதிலியாக வருகிறது.

இவ்வாறு, சொல்லிறுதி எழுத்துக்களின் மெய் - உயிர்மெய் எழுத்து பட்டியினைக் கொண்டு ஆராய்ந்தால், சிந்துவெளி எழுத்துக்களின் ல — ள — என்ற இரு எழுத்து வடிவங்களை அறிந்து கொள்ளலாம் என்று கருதி வந்ததற்கு மாறாக இவ்விரு எழுத்து களும் ஒரு தற்செயலான நிகழ்ச்சியின் மூலம் வெளிப்பட்டன. ஒரு கோடைக் கால மாலை நேரம். பகல் நேர வெப்பத்துக்கு பின்னர், அந்த மாலைப் பொழுது இனிமையாக இருந்தது. வகரமும் யகரமும் இனங்காணப் பெற்று, அவை கூட்டெழுத்தில் அமையும் முறையைக் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டிருந்த நேரம். வளையம் போன்ற வகர எழுத்தின் உள்ளே அமையும் எழுத்துக்கள் குறித்து ஆராய்ந்து கொண்டு இருந்தேன். அந்த வகை எழுத்துக்களைத் தொகுத்து அவற்றை மெய் — மெய் — உயிர்க்குறியீடு என்ற முறையில் பிரித்து எழுதிக் கொண்டிருந்தேன்.

அத்தகைய வடிவங்களில் ஒரே உயிர்க்குறியீடு இரண்டு மெய்களுக்கும் பொதுவாக வருவதையும், இவ்விதி பொதுவிதியாக எல்லா இடங்களிலும் வழங்குவதையும் உணர்ந்து கொண்டேன். வ் <அ> ய் = வய என்ற அமைப்பு இங்கு உள்ளது. இவ்வாறு, வரா, வனா, மரா, மனா, தவ போன்ற சொற்களைப் படித்தேன். அப்போது ஒரு முத்திரை ஒப்பிட்டுப் பார்க்க எடுத்துக் கொள்ளப் பெற்றது. அதன் முதல் அசை தவ — இரண்டாவது அசை வய — அடுத்து, இரண்டு மீன் வடிவங்கள், அதற்கடுத்து அம்புக்குறி போன்ற எழுத்து. இவற்றை ஆராயும் எண்ணம் பிறந்தது. மீன் வடிவம் தமிழ்மொழியின் சிறப்பெழுத்தான ழகரமே என்ற ஒருகருத்து எனக்கு இருந்தது. ஆனால், அதனை நிறுவத் தக்க சான்றுஏதுமில்லை.

எனவே, மீன் வடிவம் வரும் முத்திரைகள் சிலவற்றை எடுத்தெழுதி, அவ்வடிவம் சொற்களில் எங்கெங்கு வருகின்றது என்று ஆராயலானேன்.

மீன் வடிவம் பற்றி சிந்துவெளி இயலார் பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறி வந்தனர். மீன் வடிவம் மீன் என்ற சொல்லையே குறிப்பதாகவும் அது 6 என்ற எண்ணுடன் வரும்போது, அறு மீன் — கார்த்திகை விண்மீன் என்று கொள்ள வேண்டும் என்று சோவியத் அறிஞர்கள் கூறியுள்ளனர்[5]. ஆனால், ஒரே முத்திரையில் அடுத்தடுத்துக் காணப்பெறும் மீன் வடிவங்களின் இணைவு பற்றியும், அம் மீன் வடிவங்கள் மாறுபட்ட (உயிர்க) குறியீடுகளை - கோடுகளை - ஏற்றிருப்பது ஏன் என்றும் அவர்கள் ஏதும் கூறவில்லை. இக்கருத்துடைய எனக்கு, அந்த முத்திரையின் முதல் இரு வடிவங்கள் தவ — வய என்றும், இறுதி வடிவம் னகர ஒற்று என்றும் தெரியும் (276). எனவே, வய என்பதுடன் இதுவரை அறியப்படாதிருந்த எழுத்துக்களைக் கூட்டி, வயழழன், வயழாழன் — என்று வேடிக்கையாக ஒலித்துப் பார்த்தேன். இப்படி எத்தனையோ எழுத்துக்களுக்கு எத்தனையோமுறை ஒலியூட்டிப் பார்த்துள்ளேன். சற்று நேரம் மேற்கண்ட சொற்களின் பொருள் நிலையை ஊன்றிக் கவனித்தபோது — ஆம், அதுதான் சரி - வயலாலன். வழக்கமான மீன் வடிவத்துடன் மேலும் இரண்டு கோடுகள், மற்றொன்றில் அதன் உட்புறம் ஒரே ஒரு கோடு. முதல் மீன் நெடில், அடுத்தது குறில்.

வயலாலன் — இல்லை, தவறு — வயலாளன். ஆம், இதுதான் சரி, ஒரே குறியீடு. ஆனால் இரண்டு ஒலியன்கள். இரண்டு ஒலியன்களுக்கு, ஒரு வரிவடிவம். ல் — ள் என்ற இரண்டு ஒலிகளுக்கும் இதே மீன் வடிவம். இதுவரை மூன்று வடிவங்கள் ஒரே ஒலிக்கு இருப்பதைப் பார்த்திருக்கிறேன். இப்போது இரண்டு ஒலிகளுக்கு ஒரு வடிவம். நம்ப முடியாத உண்மை. ஆனால், வேறு வழி? நம்பியே ஆக வேண்டும். முத்திரைகளில், மந்திர மயக்கத்தில் இருந்த அந்த எழுத்துக்கள் ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்குப் பின்னர் மயக்கம் கலைந்து எழுந்துஉலகைப் பார்க்கின்றன. காட்சி மாறிவிட்டது, களமும் மாறிவிட்டது. எத்தனை இன்பமான நேரம் அது! எனக்கு மட்டுமா? எழுத்துக்களுக்கும் கூடத்தான்.

பின்னர் கழல் என்ற (353) சொல்லைப் படித்தபோது இந்த மீன் வடிவம் ழகரத்துக்கும் உரிய வடிவம் என்று புரிந்தது. கழல் என்ற சொல்லை எழுதும்போது ககரமெய்யை உயிர்மெய்யாக்க, உயிர்க்குறியீடு இடுவதற்குப் பதில் ககரமெய்யின் இடதுகாலைச் சற்றே நீட்டி எழுதி இருக்கும் அழகும், அதுவே கழல் என்பது காலுடன் தொடர்புடையது என்பதை உணர்த்தும் திறமும், கண்டு வியக்கத் தக்கதாகும். மீன் வடிவமே ழகரத்தையும் ஒலிக்கிறது என்பது பின்னர் பல முத்திரைகளால் உறுதியாயிற்று.

தமிழ் மொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்கள் ழ - ள - ற - ன என்பவையே. இதுவரை நாம் பார்த்த எழுத்துக்களில் இந்நான்கு எழுத்துக்களும் தெளிவான வரிவடிவங்களைப் பெற்றுள்ளன. ஆனால் இன்று சிலர், இந்நான்கு எழுத்துக்களுக்கும் தனித்தனியே வரிவடிவங்கள் இல்லை என்றும், இவ்வெழுத்துக்களுடன் ஓரளவு ஒலிநிலையில் ஒத்துள்ள எழுத்து வடிவங்களையே சற்று மாறுதல் செய்து சிறப்பு எழுத்துக்களை உருவாக்கினர் என்றும்[6] கூறுகின்றனர். ஆனால், தமிழின் சிறப்பெழுத்துக்களுக்குச் சிந்துவெளி நாகரிகம் வழங்கிய காலத்திலேயே வரிவடிவங்கள் இருந்தன என்று நாம் அறிகிறோம். எனவே, வரிவடிவங்களைக் கடன் வாங்கியது நிச்சயம் தமிழன்று என்றும், வர்க்க எழுத்தொலிகள் கொண்ட மொழிகளே அடிப்படை எழுத்துக்களைக் கடன் வாங்கி, அதன் வழியே பிறவர்க்க எழுத்துக்களை உருவாக்கிக் கொண்டன என்று தெளிவாகின்றது. இன்று நாம் காணும் வட இந்திய வகையான பிரம்மி இவ்வாறு உருவானது என்பதில் ஐயம் இல்லை.

சிந்துவெளி முத்திரைகளில் றகரம் பெறும் சிறப்பினையும், தெளிவான வரிவடிவம், ஒலிநிலை ஆகியவற்றையும் அறிந்தவர்கள் மேற்காணும் கருத்துண்மையை உணர்வர். சிந்துவெளி றகர மெய்யைக் கண்ட ஒருவர், குகைக்கல்வெட்டு றகரத்தைப் பார்க்க நேர்ந்தால் எவ்விதமான சிரமமும் இல்லாமல் அதை அடையாளம் கண்டு கொள்வார். காலத்தால் சற்றே பிற்பட்ட பூலாஞ்சேரிக கல்வெட்டு எழுத்துக்களை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

பகரம் சிந்துவெளி முத்திரைகளில் தெளிவான சதுரவடிவில் உள்ளது. குகைக்கல்வெட்டுக்களில் மேற்புறம் திறந்த, இடதுபுறக்கோடு சற்றே உயர்ந்த, இன்றைய தமிழின் பகரத்தை ஒத்துள்ளது. ஆயினும், இவ்வெழுத்தின் சதுரத்தன்மை தெளிவான ஒன்று. சதுரமாக ஓலைகளில் எழுதுவதில் உள்ள சிரமமே இன்றைய வடிவத்திற்குக் காரணம். சிந்துவெளி முத்திரைகளில் விளக்கம் தேடி நிற்கும் மற்றிரு எழுத்துக்கள் ஞகரமும் ஙகரமுமாகும். ஞகரம் சிந்துவெளி முத்திரைகளில் ⊓ என்று எழுதி அதன் மேலே ஒரு கோடு இட்டதுபோன்ற வடிவில் உள்ளது. குகைக்கல்வெட்டுகளிலோ ⊓ என்று எழுதி அதன் இடதுபுறம் ஒட்டியவாறு 7 என்ற வடிவத்தை எழுதியதுபோன்ற வடிவில் (படம் 29) உள்ளது. இரண்டும் தொடர்புள்ள வடிவங்களேயாகும். சிந்துவெளி எழுத்துக்களுக்கு ஒலிநிலைகளை அமைப்பதில், குகைக்கல்வெட்டு எழுத்துக்களின் வடிவங்களையே அடிப்படை வடிவங்களாகக் கொண்டேன். அவ்வாறு பெற்ற அடிப்படை வடிவங்சளில் ஒன்று ஞசரம். ஙகரமும் அவ்வாறே. சிந்துவெளியில் ஞகரம் சிறப்பான இடத்தையும், தீர்மானமான ஒலிநிலையையும், வடிவ அமைப்பையும் பெற்றுள்ளது. மூலத் திராவிட மொழியில் ஞகரம் இவ்வாறே ஒரு தீர்மானமான இடத்தினைப் பெற்றிருந்தது என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்ற அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்[7]. அதனை நம் ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

ஞகரத்தைப் போலவே ஙகரமும் கூட சிந்துவெளி முத்திரைகளில் உள்ளது. அங்கு இது E போன்ற வடிவில் உள்ளது. வேறு சில நேரங்களில் ш என்ற வடிவம் படுக்கை வசமாக அமைகிறது. இதே எழுத்து நம் குகைக்கல்வெட்டுகளில் ⊏ போன்ற வடிவில் உள்ளது. இவ்வெழுத்து சிந்துவெளியில் தனி எழுத்தாக எங்கும் ஆளப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. எனவே உறுதியாக ஒப்பிட்டறிய வாய்ப்பில்லாத நிலைமையே உள்ளது. இது பெரும்பாலும் கூட்டெழுத்துக்களிலேயே வருகிறது (மு எண் 14). கூட்டெழுத்துக்களைப் பிரித்துப் பொருள் காணும்போது பெறும் இட அமைவைக் கருத்தில் கொண்டே ஙகரம் கொள்ளப் பெற்றது. அமைவு முறையால் இது சில போது ணகர மெய்போல உள்ளது. எ - டு:

சங்ங — சண்ண
சங்ஙரா — சண்ணரா

இங்கு, *சங்ங — சங்ஙரா* என்பனவே பொருள் நிலைக்கு ஏற்ப அமைகின்றன. ஆயினும் இந்த எழுத்தை,ஐயத்திற்கிடமான — இன்னும், ஆய்வு நிலையில் உள்ள எழுத்தாகவே கொண்டு அமைத்துள்ளேன்.

276 தவ - வய - லா - ள-ன் = தவ வயலாளன்
277 பண்ண-யன்-ய்ய-பண்இ -தவ = தவ பண்இய்ய பண்ணயன்
278 தட - ட - ள் - ற்ற - ஆ = தட ஆற்றள்|ஆற்றல்
279 இரு - னா - இரு-ள்-ன் = இருனா இருளன்
280 மி - லா - நா - கய்-ஆ = மிலா|மலா நாகய் ஆ
281 வி - வனா - லா - ள - ன்= வி வனாலாளன்
282 ர் - தவ - இரு - ன - ன் = தவர் இருனன்
283 வனா - இல்- லா - ட்ட -ஆ = வனா இல்லா ஆட்ட
284 வனா-இல்-ல-அரசண்அ-ஆ=வனா இல்ல அரசண் அ ஆ
285 ஒரு-வண்-லார் - கய்-ஆ = ஒருவண் கய்லார் ஆ
286 ர் - அய் - லா - ள் - ன் = அய்ர் அய்லாளன்
287 மயில்-ஆ-வய-ல்-ன் = மயில்ஆ வயலன்
288 க - ய - கர்-வய்கால் காவ்வ= கய வய்கால் காவ்வகர்

289 பன்னிரு-வாவனி-சா-ணா =
= பன்னிரு வாவனி சணா
290 ம-அய்-இல்-லா-காவ்வ = அய்ம இல்லா காவ்வ
291 மயில்-தன்ண்-அய்-ல-ன் = மயில் தன்ணி அய்லன்
292 தவ-வனா-நா-ட-னி = தவ வனா நாடனி
293 அக-நா-ஆ-க்இரு-நா = நாஅக நாக் இரு ஆ
294 ய்-ச-ஆ-வவ-ள் = ஆசய் ஆவவள்
295 ழ்-மூ-சக-தவ-தவ = மூழ் தவ தவசக
296 ம்-ண்-ம-ப-ய் = பய் மணம்
297 ஞ-ய்-ஆ-ண்-:ள்: = ஞய ஆணள்
298 ய-நா-அரசண்அ-ஆ = நாய அரசண்அ ஆ
299 வி-வனா-வனா-ஆ-க் = வி வனா வனா ஆக்
300 தவ-ஆமு-கர்-இட-இட = தவ ஆமுகர் இட இட
301 ப-ய-அய்-ட-ஆ = அய்யப ஆட
302 தவ-இல்-லா-ட-ஆ = தவ இல்லா ஆட
303 வ-ணா-ள்-ஆ-ணா = வாணாள் ஆணா
304 மூ-ழ்-ப-னி-ஆ = மூழ் பனி ஆ
305 ச-லா-இட-த்-னி = சலா இடத்னி
306 மி-ச-ல-ன-ன் = மி சலனன்
307 ம-ல்-ல-ட-ஆ = மில்ல / மல்ல ஆட
308 ர-மர்-பண்-த-இ = இத பண்மர்ர
309 மி-வனா-ள-னண்ண-ஆ = மி வனாள ஆனண்ண
310 ம-ணா-ள்-ஆணா = மணாள் ஆணா
311 மி-வனா-ள-யண்ண-ஆ = மி வனாள ஆயண்ண
312 மி-மூ-ல்-ய்ய-காவ்வ = மி மூல்ய்ய காவ்வ
313 அ-ஆ-ப-ய-ஆ = ஆயப ஆஅ.
314 வி-ள்-ள-ட-ஆ = விள்ள ஆட
315 ள்-லா-இல்-ய்ய-ஆ = ஆய்ய இல்லாள்
316 த-ட-ள-வனா-ஆ = தட வனாள ஆ
317 வண்-ஆ-ள்-ஆ-ச = ஆச ஆள் ஆவண்
318 ம-ழ-வ-ட்-ஆ = மழவ ஆட்
319 பண்ண-யன்-ய்ய-பண்-தவ = தவபண்ய்ய பண்ணயன்
320 தவ-இல்-லா-ள-ன் = தவ இல்லாளன்
ஆரரி-ய்-ய்ய-ஆ ஆய்யய் ஆரரி
மூ-வ-ற்றத-கன்-ய-வ-டவா மூ வற்றத கன்ய வடவா
321 தவர்-கோயில்-ணா-ஆ = தவர் கோயில் ஆணா
322 :இள:-ய்-மூ-த்-னி = இளய் மூத்னி

323 வ் - ய - ஆ - ப - ய - ஆ = ஆயப ஆயவ்
324 ள் - ன - ஆ - ப - ய - ஆ = ஆயப ஆனள்
325 வி - ந - ன் - ணா - ள் - ன் = வி நன்ணாளன்
326 வ்வ - இர - ளா - ஆ - ச - ணா = சணா ஆளா இரவ்வ
327 தவ - இரு - ள் - ள் - கா - ஆ = தவ இருள்ள கா ஆ
328 வய - ணா - ள - யண் - மூ - ன் = வயணாள யண்மூன்
329 லா - ய் - மூ - ச - ணா - ணா = மூய்லா சணாணா
330 மி - ல - ய் - மூ - ச - ணா = மி மூய்ல சணா
331 இல் - லா - தேளன் - ற் - த - ஆ = இல்லா தேளண் ஆதற்
332 மி - மூ - ல - ய் - தேளண் - ஆ = மி மூலய் தேளண் ஆ
333 வி - அரசஅ - வய - மலய் - ம - ஆ = வி அரசஅ வய மலய்ம ஆ
334 கன் - னா - அய் - ப - னா - ஆ = ஆனாப அய்னாகன்
335 பண்ண - ஆ - ள் - :இள: - ர் - யவ = பண்ண ஆள் இளர் யவ
336 மி - யார் - கோயில் - எழு - ய்ய - ஆ = மியார் கோயில எழுப்ப ஆ
337 ட - ட் - நா - ல் - ய்யண்ண - ஆ = ஆய்யண்ணல் நாட்ட
338 வி - மன்ன - தேளண் - ற் - ய் - ப = வி மன்னற் தேளண் பய்ற்
339 ஞ - ள் - ஓர் - இரு - :ள்: - ள = ஞள் ஓர் இருள்ள
340 கன் - ய - ஆ - அய் - ட - ஆ = ஆயகன் அய் ஆட
341 கய - ல - அரச - ட - இரு - ஆ = கயல அரச இரு ஆட
342 சக - ஈ - அவ் - ள் - ஆ = ஆள் அவ் ஈசக
343 க் - ட்ட - இல் - லா - ஆ - க் = கட்ட இல்லா ஆக்
344 தவ - தவ - ள - நா - ட - ஆ = தவ தவள நாட ஆ
345 ஓர் - இரு - ள் - இல் - வன் - ன் = ஓர் இருள இல்வனன்
346 இ - ய் - மூ - எழு - ஞான் - ஆ = இய் மூ எழு ஞான் ஆ
347 ஓர் - ஞ - ல - கய் - ஆ - த் = ஓர்ஞ கய்ல ஆத்
348 தவ - ட் - இல் - லா - மூ - ஆ = தவத் இல்லா மூ ஆ
349 தவ - தவ - ஆ - ப - ய - ஆ = தவ ஆதவ ஆயப
350 ஆ - தவ - ல - ய் - மூ - ன் = ஆதவ லய்மூன்
351 வனா - இரு - ள் - ளா - பன்னிரு - ஆ = வனா இருள்ளா பன்னிரு ஆ
352 வ - ய - ச - ணா - ள் - ய்ய - ஆ = வய சணாள் ஆய்ய
353 க - ழ - ல் - ப - னா - ஆ = கழல் ஆனாப
354 இர - வ்வ - ஆ - ஞாமண் - கய் - ஆ = ஆகய் ஞாமங்கய ஆ இரவ்வ
355 வ - ழலா - நா - கய் - ஆ - க் = வழலா நாகய் ஆக்
356 வனா - ள் - ளார் - ஆ - அரச - தவ = வனாள் ஆளார் தவ அரச
357 மி - லா - நா - கய் - ஆ - க் = மிலா நாகய் ஆக்
358 ல் - ய் - மூ - ளார் - நான்மாடநகர்-ஆ = நான்மாடநகர் ஆளார் மூய்ல்
359 மனா - ணா - ல் - ய் - மூ - ன் = மனாணா ல்ய்மூன்
360 ன் - ஞ - இல - கய் - ஆ - க் = ஞன் இலகய் ஆக்
361 இட - இட - ஆமூ - இள - தன்னி = இட இட ஆமூ இள தன்னி
362 ட - ட் - அய் - னா - கய் - ஆ = அய்னாகை ஆட்ட
363 பா - அய் - இல் - லா - ள - ன் = அய்பா இல்லாளன்

364 ண் - த் - ழ் - தவ - ‘ள - ன் = தவழ்த்ன் தவளன்

365 இயன் - வண் - வய - மலய் - ம - ஆ = வண்இயன் வய மலய்ம ஆ

366 மூ - ர் - த் - ள் - பாண்ஈ - ஆ = மூர்த்தள் பாண்ஈ ஆ

367 தவ - ட் - ல - பா - (மயில்) - ஆ = தவட் மயில் பால் அ

368 தவ - ம - லா - ள - அரசன்அ - ஆ = தவ மலாள அரசன்அ ஆ

369 த - ட் - ம - லா - ள - ன் = தட மலாளன்

370 கன் - அய் - வய - லா - ள - ன் = அய்கன் வயலாளன்

371 தன் ணி - கரா - த் - ள் - ‘‘ள - ன் = தன்ணிகராதள் ‘‘ளன்

372 வ்வ - ண்ட - ஆ - நா - கய் - ஆ
கர - வ்வர் - அய் = ஆண்டவ்வ நாகய் ஆ
அய்வ்வர்கர

373 ணா - ஈச - மி - லார் - கய் - ஆ = மி ஈசணா கயலார் ஆ

374 கம - அரச - அ - மிராமி
ஞ - ணா - ஆமு - வய - ரி - ஆ = கம அரச அமிராமி
ஆரி வய ஆமுணாஞ

375 ஆமு - ணா - க - ‘பண் - கர் - இட - இட = ஆமுணாக பங்கர் இட இட

376 இய - பண் - ம் - ர் - தவ - தவ
ப் - கோயில்இ - யார் = தவ தவர்ம் பண்இய
கோயில் இய்யார்

377 தவ - ந - ட - ன - ய்ய - ஆ = தவ நடனய்ய ஆ

378 ஆ - ள் - ள - ப - ய - ஆ = ஆயப ஆள்ள

379 வி - இரு - ள் - ளா - ஞான் - ஆ = வி இருள்ளா ஞான் ஆ

380 யய் - மலய் - ஆ - ஒருஞா - ளார் - ஆ = ஆளார் ஒருஞா ஆமலய்யய்

381 தவ - இரு - ள் - ளா - பன்னிரு - காவ்வன் = தவ இருள்ளா பன்னிரு காவ்வன்

382 வி - இரு - ள் - ட - ஆ - ய் = வி இருள ஆய் ஆட

383 கன் - ய - ஆ - அய் - ட் - ஆ = ஆயகன் அய் ஆட்

384 வய - சணா - வாண் - இள - ப - ய = வய சணாவாண் இளபய

385 ட - ட் - ஆ - ய் - ய்ய - ஆ = ஆய்யய் ஆட்ட

386 மி - மூ - வ்வ - லர் - கய் - ஆ = மி மூவ்வ கயலர் ஆ

387 இள - ய் - மூ - பன்னிரு - ரி - ஆ = இளய் பன்னிரு மூரி ஆ

388 அய் - வனா - ணா - ள் - இரு - கய் = அய்வனாணாள் இருகய்

389 இல் - ல - ன - மூ - ட் - இரு - னி = இல்லமூன இருட்னி

390 ல - ஏழு - ஞான் - க - ந் - இரு - னி = ஞான் ஏழுல கந்இருனி

391 தவ் - பன்னிரு - வன - ல - ய் - மூ - ன் = தவ பன்னி... ய மூன

392 மி - இரு - ள - இள - பா - மலய் - ஆ = மி இருள இளபா மலய் ஆ

393 வி - வய - மலய் - ச - ணா - கய் - ஆ = வி வயமலய் சணாகய் ஆ

394 மஞ்ஞை - யார் - இரு - ள் - லா - ய் - மூ - ன் = மஞ்ஞையார் இருள லாய்மூன்

395 மூ - வ - ற்றத - கன் - ய - வ - டஅய் = மூ வற்றத கன்ய வடஅய்

396 வ - ள் - ள - ய் - மூ - ஆ - ணா = வள்ளய் மூ ஆணா

397 ய - மி - ளார் - ஆ - ள் - அரசஆ - ணா = மியளார் ஆள் அரச ஆணா

398 கோயில் - மலய் - லா - ல - ய் - மூ - ன் = கோயில் மலயலா லய்மூன்

399 ய் - இ - ஆ - பதின்மூன்று - ள - ஆ - க் = இய் ஆள பதின்மூன்று ஆக்
400 சா - ப - அய் - ஓர் - ச - ச - ஆ = அய்பசா ஓர் சச ஆ
401 ட் - இல் - ல - வர் - த - த் - ஆ = இல்லவர் ஆத்த ஆட்
402 கோயில்-மூ-ழ்-வன-இல்-லி-பன்னிரு-ஆ = கோயில் மூழ்வன இல்லி பன்னிரு ஆ
403 மி - ஒரு - த - ர - ஆ - ஒரு - வய = மி ஒருதர ஆ ஒருவய
404 வனா - இல் - லி - கோயில் - எழு - ப்ப - ஆ = வனா இல்லி கோாயில் எழுப்ப ஆ
405 கரா - வர் - அய் - இல் - லா - கய் - ஆ = அய்வர்கரா இல்லாகய் ஆ
406 தவ - எண் - வனா - ல - ய் - மூ - ன் = தவ எண் வனா லய்மூன்
407 தவ - ச - சத் - ள் - வ - ணா = தவ சசத்ள் வணா
408 வி - வனா - இல் - ல - னா - த் - னி = வி வனா இல்லனாத்னி
409 தவ - ட் - இல் - ல - ய் - மூ - ன் = தவட் இல்லய்மூன்
410 அ - ம - யார் - ட - ன - ன் - இட = அமயார்டனன் இட
411 ணா - ண் - மி - ச - ல - ன - ன் = மிண்ணா சலனன்
412 ய் - ம - ட் - ளார் - ஆ - சி - ணா = மடய் ஆளார் சிணா
413 கர் - த - ப - இல் - லா - ஆ - க் = கர்தப|பதகர் இல்லா ஆக்
414 இள - ய் - மூ - வவ - னி - நாத - னி = நாதனி இளய்மூவவனி
415 அய் - தவ - இரு - ன - நா - கய் - ஆ = அய்தவ இருனா நாகய் ஆ
416 நாத - னி - வய - ல - நா - ட - ஆ = நாதனி வயல நாட ஆ
417 இல - கா - பன்னிரு - இட - இட - கா -ணா = இலகா பன்னிரு இடஇட காணா
418 வி - வனா - இல் - ல - சா - ணா - த் - னி = வி வனா இல்ல சாணாத்னி
419 மி - ம - ணா - ட - எழு - ஞா - ஆ -ணா = மி மணாட எழு ஞா ஆணா
420 தவ - வண் - ள - ய் - ஒரு - ண் - யண்ண -ஆ = தவ ஓர்ய்ளவண் ஆயண்ணன்
421 கன் - ட்ட - இரு - இள - வவ - னி - இள-ஆ = இருட்டகன் இளவவனி இள ஆ
422 அரசன்அ - ண் - வண் - தேளண் - -ள் - லா - ச - ணா = அரசண்அ வணண் தேளண் சலாள் சணா
423 தவ - ச - ம - த் - ள் - தவ - ணா - ணா = தவ சமத்ள் தவணாணா
424 தட் - வன - ள - ட - ஆ - த - னி = தட வனாள ஆதனி ஆட
425 மி - அய் - இரு - ன - த் - னி - ட - ஆ = மி அய் இருனத்னி ஆட
426 தவ - கன் - னி - இல் - ல - ளா பண்ண - ஆ = வ கன்னி இல்ல பண்ண ஆளா
427 பாண் - ட்ட - யார் - இரு - ள் பண்ண - மா - ஆ = பாண்ட்டயார் இருள பண்ண ஆமா
428 ன் - ந - ஒரு - த் - வ்வர் - அய் - ஆ - க் = நன் ஒருத் அய்வ்வர் ஆக்
429 ணா - ட - அவ் - வய - ணா - ள் - வாவ - னி = அவ்டணா வயணாள் வாவனி
430 த - ட் - வனா - ள - ட - ஆ - த் -ஒரு = தட வனாள ஒருத் ஆட
431 தவ - வனா - ம - ணா - ள் - ள - ப - ய-ஆ = தவ வனா மணாள்ள ஆயப
432 மஞ்ஞை - யார் - ம - லா - ள - ஆ - த - வ - வவ - னி = மஞ்ஞையார் மலாள ஆதவ வவனி

433	தவ - தவ - தவ - வண்-தவ - ணா - ள்-ஆ-த	= தவ தவ தவவண் தவணாள் ஆத
434	பண் - கன் - இல் - லா - இரு - ள் - தேளன் - ற் - த - ஆ	= பண்கன் இல்லா இருளற் தேளண் ஆதற்
435	வய்கால் - ல் - தன்ணி - அய் - வய - லா - இரு - ள் - ன - ன்	= வய்கால் தன்ணில் அய்வயலா இருள்ளன்
436	தவ - ட - ட - ன் - ண - மி - ல் - ல் - ன - ன்	= தவத்தன் மிணன் மில்லனன்
437	பண்ண - ய் - அரச - அரசண்அ - வய - இல் - ல - ப - னி - ஆ	= பண்ணய் அரச அரசண்அ வய இல்ல பனி ஆ
438	வனா - ணா - ள் - நா - ட -தேளண் - ற் - த - ப - னி - ஆ	= வனாணாள் நாடற் தேளண் தபனி ஆ
439	ம் - ச - ணா - ல் - ய் - மூ - ப்ப - ஒ(ரு) - ஞ் - னி - ஆ	= ம் சணா மூய்ல் மூப்ப ஒஞ்னி ஆ
440	ணா - ஈச - மி - வனா - ள - மூ - ட் - வ் - ட் - ஆ - தாணா - வவ - னி	= மி ஈசணா வனாள மூவ் ஆட்ட தாணா வவனி

ஆ. மேற்கு ஆசியா

441	ண்ணா - கா - பன்னிரு - ணா - ண் - வாவா	= காண்ணா பன்னிரு வாவண்ணா
442	மகம - ய் - நா - ய	= மகமய் நாய
443	ண்ணா - வ்வ - ட் - மூ - ள் - ப - ய - ஆ	= ஆயபள் மூடவ்வண்ணா
444	நா - ளி - ண் - ணாரான் - க	= கணாரான் நாளிண்
445	வய - காவ்வ - ணா	= வய காவ்வணா
446	ணா - வய - ணா - அய்	= அய்ணா வயணா
447	அரசண்அ - ர - ய -ளார் - ஆகாவ்வ	= அரசண் அரய ஆகாவ்வளார்
448	கான் - அரச - கய - கய - ன்	= கான் அரச கய்கயன்

இ. மத்திய ஆசியா

449	நா - ய	= நாய

6. சிந்துவெளி மொழியின் இலக்கணம்

சிந்துவெளி மொழியின் இலக்கண அமைப்பு பன்முகச் சிக்கல் கொண்டது. இருப்பினும் நமக்குக் கிடைத்துள்ள முத்திரைகளைப் பொறுத்தவரையில் நமக்குச் சில தெளிவான முடிவுகள் கிட்டுகின்றன. முத்திரைகல் பல, பேச்சு வழக்குச் சொற்களால் அமைந்தவை என்று அறிகிறோம். ஆறு - அத் (87) என்றும், நீர் - தன்ணி (291) என்றும் குறிப்பிடப் பெறுவதே இதனை உணர்த்தும். அச்சொற்கள் அதே வடிவங்களில் வழங்கி வந்தன என்பது உறுதி. மேலும் பல சிறப்புக் கூறுகளையும் ஒப்பு நோக்கி முத்திரைகளை ஆராய வேண்டியுள்ளது.

ஆயினும், தமிழ் மொழியின் இயல்புகளோடு, அதன் மரபுகளோடு முரண்பாடும் எத்தகைய ஒன்றினையும், நான் இது நாள்வரையிலும் கண்டதில்லை. எனவே, தமிழ் மொழியின் சிறப்பான அடிப்படை நியதிகள், ஏறக்குறைய 5000 ஆண்டுகளாக, மிகப் பெரிய மாற்றங்களுக்கு உட்படாமல் உயிரோட்டம் மாறாத நிலையில் விளங்குவதைக் காணலாம். இதனை நன்கு உணர்ந்த முன்னோரே தமிழ் மொழியினைக் கன்னித் தமிழ் என்று வழங்கினராதல் வேண்டும்.

1. ஒலியன்கள் :

(அ) உயிர்:

திராவிட மொழிகளில் உயிர் எழுத்து நீட்சி என்பது ஒலியன் தன்மையுடையது என நாமறிவோம். சிந்துவெளி மொழியிலும் அவ்வாறே உள்ளது. நாம் முன்பே பார்த்தவாறு அந்த மொழியில் எ, ஏ, ஒ, ஓ போன்ற உயிர் எழுத்துக்கள் இல்லை. உகரம் நேரடியாக இல்லை. மாறாக எழுத்துக்களில் (உயிர்மெய்) அதன் உயிர் ஒலி இணைந்திருப்பதைக் காண்கிறோம்.

உயிரொலியன்களின் அமைப்பு :

	முன்		இடை		பின்	
	கு	நெ	கு	நெ	கு	நெ
மேல் :	இ	ஈ			(உ)	(ஊ)
நடு :	—	—			—	—
கீழ் :	—	—	அ	ஆ	—	—

இங்கு, அ ஆ, இ ஈ, என்னும் நான்கு உயிர் ஒலிகளே உள்ளன. இவ்வொலிகள் சொற்களின் முதலிலும், இறுதியிலும் வருகின்றன. இவற்றைத் தவிர, உயிர் எழுத்து வரிசையில் அமைந்துள்ள அய் (ஐ), அவ் (ஔ) என்ற இரண்டு உயிர்த் தொடர்களும் (Diphthongs) அம்மொழியில் இடம் பெறுகின்றன, அய் என்ற எழுத்து முதலிலும், இறுதியிலும் இடம் பெறுகின்றது. எ - டு : அய்யப (301), அய்லன் (291), நாகய் (255) இல்லாகய் (405). அவ் என்ற எழுத்து சொல்லின் முதலில் மட்டும் வருகிறது. எ - டு: அவ்வா (180), அவ்ய்ய, (102) அவ்டணா (429). இவ்வெழுத்து மொழி இறுதியில் வருவதில்லை.

(ஆ) மெய்யொலிகள் :

பிறப்பு வகை	வெடிப்பொலி	மூக்கொலி	மருங்கொலி	உரசொலி	அரைஉயிர்
1 கடைநா கடையண்ணம்	க்	(ங்)			ய்
2 இடைநா இடையண்ணம்	ச்	ஞ்			
3 நாவளை ஒலி	ட்	ண்	ள்	ழ்	
4 நுனிநா நுனியண்ணம்	ற்	ன்	ல்	ர்	
5 பல்லொலி	த்	ந்			
6 ஈரிதழொலி	ப்	ம்			வ்

எல்லா 18 மெய்களும் இடம் பெறுகின்றன. ஙகர மெய் ஒன்று மட்டுமே, தனி எழுத்தாக எங்கும் அமையாததால் உறுதிப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. ஆயுத எழுத்து இல்லை. மெய்யெழுத்துக்களில் க், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ், ஆகிய ஒன்பது சொல்லின் முதலில் வருகின்றன. ந், ங், ஞ் என்னும் மூன்று மெய்கள் தவிர மற்ற மெய்கள் அனைத்தும் மொழி இறுதியில் வருகின்றன. லகரம் மொழி முதலில் வருவது மொழி இயல்பிற்கு மாறுபாடாக இருக்கிறது. ஆனால், இவ்வாறு வரும் சொல் வேற்று மொழிச் சொல்போல் தோன்றுகின்றது. லய்மூன், லய்மூணா (380, 262) என்று வருகின்றது. ஆனால், பல இடங்களில் இலய்மூன் (261) என்று வருவதால், மேற்கூறிய லகர முதன் மொழியை, இகரம் எழுதப்படாத வடிவமாகக் கொள்ளலாம். இலய்மூன் அன்னிய நாடுபோல் காணப்படுவதால், அக்காலத்தில் லய்மூன் என்பதை இகரம் இட்டும், இடாதும் எழுதினர் என்று கருதலாம். இலட்சுமணன், லட்சுமணன் என்று வெவ்வேறு முறைகளில் எழுதப் பெறுவதை இக்காலத்தும் பார்க்கிறோம்.

2. உயிரெழுத்து இடமாற்றம் :

எகர உயிர் ஒலி வர வேண்டிய இடங்களில் அகரமும், இகரமும் வருகின்றன. எ - டு :

1. எ > அ = செய்ய > சய்ய (135).
2. எ > அ = வெள்ளை > வள்ளய் (396)
3. எ > இ = வெள்ளை > விள்ள (314)

எகரம் வரிவடிவில் இல்லாததால் அதனை எழுத இயலாமல், அ - இ போன்ற உயிரொலிகளை ஒலித்து எழுதினர் என்று தெரிகிறது. வேலன் என்பதற்குப் பதிலாக அய்லன் (291) அய்லாளன் (286) என்று எழுதியதன் காரணமும் அதுவேயாக வேண்டும்.

லய்மூன் என்ற இடப்பெயரிலும் இத்தகைய இடம் பெயரல் உள்ளது. தில்முன் (DILMUN) என்ற சொல்லின் D என்ற ஒலியை ஒலிக்க இயலாததால், இல்முன் (ILMUN) என்றும்; ஒலி இடம் பெயரலால் இல்முன் > லய்முன் - லய்முன் என்றும் மாறுகிறது. இரண்டு > ரெண்டு என்று மாறுவதற்கு ஒப்பாகும் இது. பல இடங்களில் ல்ய்முன் என்றே வருகிறது.

3. குற்றியலுகரம்:

சொல்லிறுதியில் வரும் உகரம் தெளிவாக ஒலிக்கப்படவில்லை என்று தெரிகின்றது. மொழி முதல் உகரம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. அது எழுத்து வடிவில் இல்லை என்று அறிவோம். ஆயினும், உகரம் இருந்தமைக்கும், அது பேச்சு வழக்கில் இடம் பெற்றிருந்த மைக்கும் உரிய சான்றுகள் உள்ளன. மொழியிறுதி உகரத்தை நீக்கி விட்டாலும், வேரசை யாகிய முதலசை உகரம் மாற்றமில்லாமலே இருக்கும். எடுத்துக்காட்டாக 'மூன்று' என்ற சொல்லின் முதல் எழுத்து மூ என்பதைக் கவனியுங்கள். மூன்று என்பது மூவேந்தர் என்ற சொல்லில் னகர ஒற்றும், இறுதி உயிர்மெய்யும் கெட்டு 'மூ' என்ற எழுத்தாக மட்டுமே வரு கிறது. இது இம்மொழியிலும் அதே இயல்புடன் உள்ளது. எனவே முத்திரை எண் 194 இல் '111—தவ—கா—ஆ' என்று உள்ளதனை, மூ தவகப் ஆ என்று படிக்கிறோம். இதன் முதல் மூ என்ற எழுத்தில் ஊ என்ற எழுத்து—ஈரிதழ் ஒலியன்—ஒலியளவில் உள்ளது, ஆனால், சிந்துவெளி மொழியில் அதற்கு வரிவடிவம் இல்லை.

மொழியிறுதி உகரம் குற்றியலுகரமாகவே உள்ளது. ஒன்று, இரண்டு, மூன்று....ஆறு என்று எல்லா எண்களிலும் உள்ள இறுதி உகரம் குற்றியலுகரமேயாகும், ஆனால், அம்மக்கள் அவற்றை—குற்றியலுகரங்களை—அவை உகரங்களே அல்ல என்று கருதி ஒலித்துள்ளனர். ஆறு என்ற எண் ஆர என்று (217) ஒலிக்கப்பெறுவதுடன், அதே ஒலி நிலையில் வரிவடிவமும் பெற்றுள்ளது. அதுபோல, ஆடு என்பதை ஆட என்று (9) ஒலித்துள்ளனர்; எழுதியும் உள்ள னர். இந்த வடிவங்களால், இச்சொற்கள் குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் என்று அறிகி றோம். இதனால் நதியைக் குறிக்கும் ஆறு என்ற சொல்லை ஆற—ஆர என்று எழுதுவதால் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்க்க ஆறு என்பதை ஆற—ஆர என்று எழுதாது 'ஆத்' என்று (87) எழுதியுள்ளனர். இவ்வாறு உகரத்தை ஒலிக்க இயலாத மக்களே தமிழ்நாட்டில் மொழியைப் பயன்படுத்திய போது குற்றியலுகரத்தை உணர்ந்து அதற்கு இலக்கணம் வகுத் திருக்க வேண்டும்.

இங்கு 263 ஆம் எண்ணுள்ள முத்திரையைக் குறிப்பிட வேண்டும், 6—ல—ன் என்று அமைந்துள்ள சொல் ஆய்வுக்குரியதாகும். இதனை ஆறு—ல—ன் = ஆறுலன் என்று படிக்க லாம். ஆனால், ஆறு என்ற எண் ஆர என்று ஒலிக்கப்பெறுவதை முன்பே பார்த்துள்ளோம் எனவே, சிந்துவெளி மக்கள் ஆரலன் என்றே ஒலித்திருக்க வேண்டும். ஆரல் = கார்த்திகை, ஆரலன் = கார்த்திகையான். இது பொருள் நிலையிலும் பொருத்தம் பெற்றுத் திகழ்கிறது. வெடிப்பொலிகளை உச்சரிக்கும் போது ஏற்படும், உயிரொலிகளைப் போன்ற ஒரு விடுப் பொலியே குற்றியலுகரமாகும் என்று மொழியியலார் கூறுகின்றனர். இந்த விடுப்பொலி உகரத்தை அகரச்சாயல் பெறுமாறு செய்கிறது. எடுத்துக்காட்டாக தேசிய கீதத்தைப்பாடும் மாணவர்கள், அதனடியாக வரும், 'சிந்து குஜராட்ட மராத்தா' என்பதை, 'சிந்த குஜராட்ட மராத்தா' என்று ஒலித்துப் பாடுவதைக் காட்டலாம். 'சிந்து' என்ற மென்தொடர் குற்றிய லுகரம்' 'சிந்த' என்று அகரச்சாயல் பெற்று ஒலிப்பது போல, ஆறு—ஆர என்று அகரச்சாயல் பெற்று ஒலிக்கின்றது. மேலே காட்டியவற்றின் அடிப்படையில், வியப்பளிக்கும் செய்தி ஒன்றை இங்கே காணலாம். கழுகன் என்ற (26) முத்திரையைப் பற்றி முன்பே குறித்துள்ளேன். இதனை, மேற்கூறிய செய்திகளின் ஒளியில் கழுகு—ன் = கழகன் என்றே படிக்கவேண்டும். கழகம்+அன் > கழக+அன் = கழகன். எனவே, கழகம்—கழகன் என்ற சொல்லையே கழுகு வடிவில் எழுதிக் காட்டினராதல் வேண்டும்.

4. தொடரியல்:

(அ). திணை—பால்—எண்—இட ஒழுங்கு:

சொற்றொடர்கள் பெரும்பாலும் கருத்து, செய்தி விளக்க வாக்கியங்களாகவே உள்ளன. எனவே, சொல்ல வரும் செய்திகளை, மனங்கொள்ளத் தக்கவாறு சொல்வதே நோக்கமாக உள்ளது. ஆயினும், மரபு கெடாது, திணை—பால்—எண்—இடம் ஆகியன இணைந்து தொடர்கள் அமைகின்றன. ஆனால், எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்ற அடிப்படை நியதி சற்றே நெகிழ்ந்து காணப்படுகின்றது. திராவிட மொழிகளுக்கே உரியதான திணை, பால், எண், இடம் முதலிய அமைப்புகள் ஒழுங்குபட அமைகின்றன. எ—டு:

1. அய்கன் வயலாளன் (370)
2. தவட்ட மிணன் மில்லனன் (436)
   (தவத்த மீணன் மில்லனன்)
3. தவ ஓர்ய்ளவன் ஆயண்ணன் (420)
   (தவ ஓர் இளவன் ஆயண்ணன்)

இவ்வாக்கியங்கள் தேவையற்ற சொற்கள் ஏதும் இல்லாமல், சொல்ல வந்த செய்திகளை விளக்கப்படுத்தும் இயல்புடன் அமைந்துள்ளன. இம்முறையிலும், இவை பிற்காலக் குகைக் கல்வெட்டு மொழியை ஒத்துள்ளன.

(ஆ) வினைச்சொற்கள்:

தொடர்களில் வினைச்சொற்களும், பெயர்ச்சொற்களும் எளிய அமைப்புடனும், தமிழ் மொழி மரபிற்கு ஏற்றவாறும் அமைந்துள்ளன. எ—டு:

1. தவ பண்இய்ய பண்ணயன் (277)
2. மூ வற்றத கன்ய வடவா (320)
3. தவ தவர்ம் பண்இய கோயில் இய்யார் (376)
4. வனா இல்லி கோயில் எழுப்ப ஆ (404)

பண்ணிய, வற்றாத, எழுப்ப என்பன போன்ற எச்சச் சொற்களை எடுத்துக்காட்டலாம். இவை பெயரெச்சங்களாக வரும் வினைகள். மேலும், பண்ணிய—பண்ணு என்பது போன்ற வடிவங்கள், இன்றைக்கும் வழக்கில் உள்ளன. இவை, 4500 ஆண்டுகளுக்கு முன்பே வழக்கில் இருந்ததை எண்ணிப் பார்த்தால் வியப்புத் தோன்றுகிறது. வினைமுற்றுக்கள் பற்றி நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

(இ) விகுதிகள்:

விகுதிகள் தெளிவாகவும், விளக்கமாகவும் அமைந்துள்ளன. அன், ஆன், அள், ஆள், அர், அ, இ, அய், கன், கர் போன்ற விகுதிகள் உள்ளன. இவற்றைத் தவிர அல் என்னும் பெயராக்க விகுதியும் உள்ளது. கன், கர், என்பன ஒருமை, பன்மையைக் காட்டுகின்றன. அன்—அர் என்பது போல, கன்—கர், அய்கன், ஆயகன், இடகர், காவ்வகர் போன்ற சொற்கள் உள்ளன. வடநாட்டுத் தொடர்பால் வழங்குவது என்று நாம் கருதும் கர்—கார்—காரன் போன்ற விகுதிகளுக்குத் திராவிட மொழிகளிலேயே இடமுண்டு என்று தெரிகிறது. பால் காரன்—பால்கார் என்று சிலர் கூறுவர். கார் என்பது கர் என்பதன் நீட்சியே. அர்—ஆர்

போல கர்—கார் என்பன அமைகின்றன. ஆயினும், இவை பேச்சு வழக்கிற்கே உரியனவாதல் வேண்டும். இன்றைய ஆளன், ஆளர் என்பன போன்ற விகுதியமைப்புகள் சொல்லாக்கத்திற்கு அன்றே பயன்பட்டுள்ளன. எ—டு: சணாளன், கமனாளர் (222,60)

அ, ஆ, இ, ஈ போன்றனவும் விகுதிகளாக வருகின்றன. அ: நாய = நாய்+அ; ஆ: அமூன்ணா = அமூண்+ஆ; இ: கன்மி, ஆத்னி. இகரம் உயர்திணை, அஃறிணைக்குப் பொதுவாகவே இன்றும் வருகிறது. எ—டு: கிழவி — மண்வெட்டி. மொழி வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், ஆண்பால், பெண்பால் என்றில்லாமல், ஆண்பால், ஆண்பால் அல்லாதவை என்ற பால் பகுப்பு முறையே நிலவி வந்த ஒரு பழங்காலத்தில், இகரம் பெண்பால், அஃறிணை என்ற இரண்டிற்கும் பொதுவாகவே இருந்தது. இங்கே வேறொரு செய்தியினையும் கூற வேண்டும். அது இகரம் பெண்பாலுக்கு விகுதியாக ஆளப்படுவதுபற்றியது. எ—டு:

1 தவ வனா நாடனி (292)
2 இளய்மூவவனி நாதனி (414)
3 நாதனி வயலநாட ஆ (416)

இவற்றில் நாதனி, நாடனி என்று வரும் பெண்பாற் பெயர்கள் விகுதிபற்றிய ஆய்வுகளுக்குப் பயன்படுபவையாகும். இவற்றை முறையே நாடன் + இ, நாதன் + இ என்று பிரிக்கலாம். இவற்றின் இறுதியில் அன் — இ என்ற இரண்டு விகுதிகள் இணைந்து வருகின்றன. இன்றைய மொழியில் அவர்கள் என்று கூறுகிறோம். அவர் - கள் என்னும் இரண்டு பன்மை விகுதிகள் சேர்த்து வழங்குவதை நாம் திருக்குறளிலேயே காண்கின்றோம். அவர் என்பது பன்மையைச் சுட்டும் நிலையை மறந்து, அது, அவன் என்ற சொல்லின் மரியாதை உணர்வைக் காட்டும் வடிவம் என்ற நிலை உருவானபோது, பலர்பால் விகுதியாக, 'கள்' சேர்க்கப்பெற்றது. அதே நிலையைப் போன்றதுதான் நாதனி, நாடனி என்ற இரு சொற்களின் அமைப்பும். நாதன், நாடன் என்பன ஆண்பாலுக்கு உரிமையாக இருந்தன. இதன் பெண்பால் வடிவம் தேவைப்பட்டபோது — அதாவது பெண்பால் விகுதிகளின் வளர்ச்சியின் முதல் கட்டத்தில் — ஆண்பால் விகுதியுடன் இணைப்பதன் மூலம் உயர்திணைப் பெண்பால் உருவாக்கப் பெற்றது எனலாம். ஆண்பால், ஆண்பால் அல்லாதவை என்ற நிலையில் இருந்து ஏற்பட்ட இவ்வளர்ச்சி, ஆண்பால் அல்லாதவற்றிலிருந்து பெண்பால் பிரித்தெடுக்கப் பெற்று, ஆண்பால் ஒருமையுடன் இணைத்து பெண்பால் ஒருமை என்ற இடைநிலை தோற்றுவிக்கப் பெற்றதை இதனால் நாம் அறிந்து கொள்கிறோம். ஆயினும், சிந்துவெளியில் அள், ஆள், அன், ஆன், அர் போன்ற உயர்திணை விகுதிகள் நன்கு வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. எனவே, நாதனி, நாடனி போன்ற இறைவழிபாட்டுத் தொடர்பான சொல் வடிவங்கள் சிந்துவெளி நாகரிக முத்திரைகளின் காலத்திற்கும் மிக முற்பட்டவை என்று கருதலாம்.

(ஈ) உருபுகள்

இங்கே விகுதிகளுடன் தொர்புடைய வேற்றுமை உருபுகள் பற்றிய செய்தியொன்றைக் கூறவேண்டியுள்ளது. முத்திரைகளில் உள்ள சுருக்கமான தொடர்களில் இருந்து, வேற்றுமை உருபுகளைத் தெரிந்து கொள்வது கடினமே. எனினும், சில சான்றுகளும் உள்ளன. பெயர்களும், விளிகளும் இயல்பாக உள்ளன. இறைவனை வேண்டி வழங்கப்பெறும் காணிக்கைகள் பற்றி வரும் குறிப்புகள் ஆகையால் பெயர்களும், விளிகளும் நிறைந்துள்ளன. எ - டு: இருளா (351), ஆயபா பாலா (237), சணா (56), கண்ணா (42). ஆனால்,

பொருள் வேற்றுமைப்படுத்தும் வடிவங்கள் என்று பார்த்தால் சிலவற்றைக் காண்கிறோம். அசரம் பல இடங்களில் ஆறாம் வேற்றுமை உருபாக வழங்குகிறது. எ - டு :

1 வனா இல்ல அரசண்அ ஆ (284)

2 நாய அரசண்அ ஆ (298)

இத்தொடர்களில் அகரம் அது என்ற வேற்றுமை உருபிற்குப் பதிலியாக வந்துள்ளது. தமிழ்மொழியின் வேற்றுமை உருபு என்னும் அளவில், அகரம் ஆறாம் வேற்றுமையாகிய 'அது' என்பதன் பழமையான வடிவமே என்பதில் ஐயம் இல்லை. அரச இலையின் மீது அசரக்குறியீடும், ணகர மெய்யும் எழுதப்பட்டுள்ளதால் அரச - ண் - அ என்று, அகரத்தைத் தனியே அமைத்தே படிக்க வேண்டும். அகரம். ஆறாம் வேற்றுமைக்கு உரிய பன்மை உருபாகக் குறிப்பிடப் பெறுகிறது நன்னூலில். மேற்கண்டவாறு, அகரம் ஆறாம் வேற்றுமைக்கு ஆளப்பெறுவது குகைக்கல்வெட்டுக்களிலும் உள்ளது. விக்கிரமங்கலம், மேட்டுப்பட்டிக் கல்வெட்டுக்களிலும், மற்றும் பல இடங்களிலும் இவ்வாறு வருவதைக் காணலாம்.

எ—டு:

1. எம்ஊர் சஅதன்அ தான
2. குவிர அந்தை வேள்அ தான

சிந்துவெளி முத்திரைகள்:

1. நாய அரசன்அ ஆ (298)
2. தவ மலாள அரசண்அ ஆ (368)

இவ்விரண்டும் மொழிபமைப்பிலும், பொருளமைதியிலும் ஒத்திருப்பதைக் காண்க,

முத்திரைகளில் வேறொரு வடிவமும் உள்ளது. எ—டு:

1. அன்ன இடத் அய்னா (267)
2. வி மடத் மூப ஆ (191)

இவற்றுள் இ—த், மடத் என்பன, இ—த்து, மடத்து போன்ற வடிவங்களின் குறைகளே. இடம் + அத்து, மடம் + அத்து என்று நாம் பிரிக்கலாம், அத்து என்பது சாரியை. எனவே இத்தொடர்களை (1) அன்ன இடத்தின் அய்னா, (2) வி மடத்தின் மூப ஆ என்று விரிக்கலாம். சாரியைகள், பெயர்களை உருபுகளுடன் இணைக்கும் தன்மை கொண்டவையே. இதனால் இடத், மடத் என்ற வடிவங்களைக் கொண்டு, அத்து—இன் என்னும் இரண்டு உறுப்புகளை அறிந்து கொள்ள முடிகிறது. அத்து என்பது சாரியை, இன் என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு ஆகும்.

இத்தகைய வடிவம் தொடர்நிலையிலும் உள்ளது. வருமொழியின் இனவெழுத்தானது இரட்டித்து வருகிறது. எ—டு:

நான்மாட நகர்த் தவாவாரி (179)

இங்கு 'நகர்த் தவாவாரி' என்பது 'நகரத்தினது தவாவாரி' என்ற பொருளில் தொகையாக வந்தது. நகரத்தினது அழியாத—தவறாத மதில் அல்லது கதவம் என்பது அதன் பொருள்,

இன்—அது என்று சாரியையும், உருபும் வந்தன. இவ்வாறு வருவது தமிழ் மொழியின் புணர்ச்சி விதிகளுக்கு ஏற்புடையவாறு உள்ளது. இதனால், புணர்ச்சி நிலைகளும், நியதிகளும் மொழி வளர்ச்சியின் தொடக்க காலத்திலேயே இருந்தன என்று அறிய முடிகிறது. இதனை ஒப்பு நோக்கினால், 'பெயரினாகிய தொகையுமாருளவே அவ்வு முரிய அப்பா லான' என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது இந்த முத்திரைத் தொடர்.

5. இயற்பெயரும் சிறப்புப் பெயரும்

சிந்துவெளி முத்திரைகளில் இயற்பெயர்களும், சிறப்புப் பெயர்களும் நிறைந்துள்ளன. இயற்பெயருக்கு முன்னர் சிறப்புப்பெயர் வரவேண்டும் என்ற விதிப்படியே அமைகின்றன. தமிழ் இலக்கண விதிமுறை வழுவாது பெயர்களும், அடைமொழிகளும், சிறப்புப் பெயர்களும் அமைகின்றன. செய்தி விளக்கம் என்ற அடிப்படையில் அவை ஒன்றையொன்று விளக்கி நிற்கின்றன. எ—டு:

1. தவ அரசண்அ ஆ (90)
2. பகவ சணா (149)
3. காவண் இளசணா (192)
4. தட ஆதவ்வ இரு ஆ (224)
5. மி இள ஆனாண்ண (231)
6. ஆயப ஆஅ (313)
7. ஆனாப அய்னாகன் (334)

இங்கு, சணா, ஆதவ்வ, ஆனாண்ண, ஆஅ; அய்னாகன் போன்ற பெயர்கள் இயற்பெயர்களாகும். தவ, பகவ, காவண், தட, ஆயப, ஆனாப போன்றவை சிறப்புப் பெயர்கள். தவம் இறைத்தன்மை, பெருமை, தொழில் போன்றவற்றின் அடிப்படையில் சிறப்புப் பெயர்கள் உருவாகின்றன. இத்தகைய முத்திரைகளில் ஒன்றை இங்கே காணலாம். ஒரு தவசிக்கு வழங்கப்பெறும் அடைமொழிகளும், சிறப்புப் பெயர்களும் நமக்கு மலைப்பைத் தருகின்றன. ஆதன் என்பது தவசியின் இயற்பெயர்.

'தவ தவ தவவண் தவணாள் ஆத (433)

இந்த முத்திரையில் ஆதன், 'தவதவ தவவன் தவனாள்" என்று எல்லையற்ற மதிப்பளித்தும் பாராட்டப் பெறுகிறார். இயற்பெயருக்கு முன்னரே அடைமொழிகளும், சிறப்புப் பெயர்களும் வரவேண்டும் என்ற விதி அப்படியே கடைப்பிடிக்கப் பெறுவதைக் காணலாம். இதே அமைப்பும், நியதியும் குகைக் கல்வெட்டுக்களிலும் காண்கிறோம். எ - டு

1. ஊபாஸஅன் தொண்டி ஊவன் கொடி பளி இ
2. வெண் காஸிபன் கொடுபித கல் கஞ்சனம்.

ஊபாஸன், வெண் என்னும் சிறப்புப்பெயர்கள் இயற்பெயருக்கு முன்னரே வருகின்றன.

6. சொற்புணர்ச்சி:

(நிலைமொழி வருமொழிகளின் அமைப்பு): சொற்களின் புணர்ச்சி நிலை மிகத்தெளிவானது. நீண்ட சொற்றொடர்கள் இல்லையாயினும், நாம் முன்பே பார்த்தவாறு நான்மாட நகரீத் தவாவாரி' போன்ற தொடர்கள் உள்ளன. 'சணா மூய்ல் மூப்ப ஒஞ்னி

ஆ (439) போன்று அமைந்துள்ள தொடர்களும், இன்றும் வழக்கிலுள்ள வழக்குத் தொடர் ளின் அமைப்பினையே கொண்டுள்ளன. எ - டு:

1. சணாள் = சண் + ஆள்
2. வனாளாளன் = வனாள் + ஆளன்
3. மணாட = மணம் + ஆட
4. ஆயண்ணா = ஆய் + அண்ணா
5. ஆயனாளா = ஆயன் + ஆளா
6. வயலாயண்ண = வயல் + ஆயண்ண

மொழியிறுதி மெய்யும் வருமொழி உயிர் முதலும் புணர்ந்தே தொடர் அமைகிறது. இது உறுதியாகக் கடைப்பிடிக்கப் படுவதைக் காண்கிறோம். புணர்ச்சி சிவடிவங்கள் தெளிவாகவும், எளிமையாகவும் உள்ளன.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கினால் கால மாறுபாட்டினாலும், சமுதாய அமைப்பு நிலைகளால் ஏற்படும் மொழிக் கூறுகளினாலும் உண்டான மாற்றங்களைத் தவிர, இந்த 5000 ஆண்டுகளில், மொழியின் அடிப்படை உள்ளமைப்பு விதிகளில் பெரியமாற்றம் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை என்றே தெரிகிறது. இக்காலம் வரை, திராவிட மொழிகள் உயிரோட்டமுள்ள, வற்றாத நதியான சிந்துவைப் போல, வழங்கி வரும் பான்மையை அறிந்தின்புறலாம்.

7. முத்திரைகளின் சிறப்புச் செய்திகள்

முத்திரைகள் கூறும் செய்திகளில் இருந்து, சிந்துவெளி மக்கள் திராவிட இனத்தினர் என்றும், அவர்கள் திராவிட அல்லது தமிழ் போன்றதொரு மொழியைப் பேசினர் என்றும் உறுதியாகிறது. ஆரியர் வருகையைப்பற்றிய குறிப்புகளோ, அவர்களது மத - கலாச்சார இயல்புகளோ ஒரு சிறிதும் காணப்பெறவில்லை என்று அறிகிறோம். எனவே, சிந்துவெளி நாகரிகம் ஆரியர் வருகைக்கு முற்பட்டது என்று கொள்ளலாம். சிந்துவெளி மக்கள், ஏதோ ஒரு துன்பம் நேர்ந்ததால், இனி அப்படி ஒரு துன்பம் நேர முடியாத இடத்திற்கு — அதாவது தென்னிந்தியாவிற்கு இடம்பெயர்ந்து வந்தனராதல் வேண்டும்.

அவர்களது இடப்பெயர்ச்சி ஏறக்குறைய கி. மு. 1750 முதல், கி. மு. 1500 வரையிலான காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். கி. மு. 1000 முதல் தென்னிந்தியாவில் தெளிவான வரலாற்றுச் சான்றுகளுடன் கூடிய, நாகரிக - கலாச்சார கூறுகளை அறிய முடிகிறது. கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரிய ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆய்வுகளும், கி. மு. 900 ஆண்டளவிலான கொற்கை ஆய்வுகளும் இதனை நன்கு உணர்த்துகின்றன. இத்தகைய இடப்பெயர்ச்சியைப் பற்றிய ஓர் அகச்சான்றினைச் சங்க இலக்கியத்திலேயே காண்கிறோம். அது பற்றி பின்னர் காணலாம். ஆனால், இன்றைய சிந்துவெளிப் பகுதியில் திராவிட நாகரிக - மொழியியல்புகள் இல்லை. மொழி அளவில் ஆப்கானிஸ்தானில் பேசப்பெறும் பிராகுயி (Brahui) மொழி ஒன்றே அந்த இடத்திற்கும் திராவிடர்களுக்கும் உள்ள தொடர்பை நிலைநாட்டக் காண்கிறோம். அடுத்தடுத்து நிகழ்ந்த வேறுபட்ட நாகரிகங்களின் அலைவீச்சில், சிந்துவெளி நாகரிகத்தின் தனித்தன்மை — அடையாளக் கூறுகள் அனைத்தும் மறைந்து போயின என்பது மட்டும் உறுதி.

ஆனால், கி. மு. 1500 அளவில் நிலவிய சிந்துவெளி நாகரிகப் பகுதியின் சமுதாய — அரசியல் — பொருளாதார நிலைகள் எவ்வாறு இருந்தன என்பதை ரிக்வேதம் தெளிவாக உணர்த்துகின்றது. இதனால், ஆரியரை எதிர்த்துப் போரிட்ட மக்கள் இலிங்க வழிபாட்டினர் (சிசுணதேவா) என்றும், அவர்கள் கோட்டைகளிலும் நகரங்களிலும் வாழ்ந்தனர் என்றும், கால்நடை மந்தைகளை மிகுதியாகப் பெற்றிருந்தனர் என்றும் அறிகிறோம். கால்நடை மேய்த்தல், உழவுத்தொழில், வாணிபம், மற்றும் பிற தொழில்களில் சிறந்திருந்தனர். அவர்களது செல்வச் செழிப்பு ஆரியர்களது பொறாமைக்குக் காரணமாயிற்று.

1. சமுதாயப் பிரிவினர் :

சிந்துவெளியில் ஆயர்களும் (15, 79), நாகர்களும் (59, 148) நிறைந்திருந்தனர். இவர்கள் இனத்தால் வேறுபட்டிருந்தனரா, தொழிலால் வேறுபட்டிருந்தனரா என்று விளங்கவில்லை. தொழிலாளர்கள் : கமனாளர் (60), கமமி (61) உழவர்; ஆகாவ்வகர் (184); யப காவ்வ (110), வய காவ்வ (193); குளங்களுக்கு நீர்வரும் வாய்க்கால் வழிகளைக் காப்போர்: சய வய்கால் காவ்வகர் (288): கோயில் காவ்வ (39), தவட் ஆகாவ்வகர் (184) காவ்வ = காவல், காவ்வகர் = காவலர்; வாணிபம் : வய்ர் எட்ய (89) வயிர எட்டி; கன்மி ஆ (138) கன்மி = தொழிலாளி.

2. கடவுளர் :

(அ) சணா (149); சண்ணா (263) என்ற தெய்வம் முத்திரைகளில் சிறப்பிடம் பெறுகிறது. இப்பெயர்கள் சண்ணம் என்ற சொல்லடியாகப் பிறந்திருக்க வேண்டும். சண்ணம் = ஆண் குறி, இலிங்கம். சண்ணா ஆரலன் எனப்படுகிறான் (263) ஆரலன் = கார்த்திகையான். சணாவுக்கு இருளன் என்ற பெயரும் உண்டு: இருள இள சணா (266). இருளன் = இருள் போன்ற கரிய நிறம் உடையவன். எனவே, 'மி இருளன் (159), மி இரு அய்ய (195), தவர் இருனன் (282), ஆசய் இருள (294) என்றெல்லாம் குறிப்பிடப் பெறுகிறான்.

சணா, இருளன் இருவருமே இளமையானவர்கள்: இள ஆரய (103), இள்ள சணா (186), மி இருள இளபா மலய் ஆ (392). இருவரும் ஆயர்களுடன் தொடர்புடையவர்கள் : ஆய இருள - மீதா (169), மி இரு ஆய்ய (195), வய சணாள் ஆய்ய (352). இருவரும் மலைகளுடனும் வனங்களுடனும தொடர்புடையவர்கள் : வனா இருள்ளா பன்னிரு ஆ (351), தவ இருள்ளா பன்னிரு காவ்வன் (381), ய இருள இளபா மலய் ஆ (392), வி வயமலய் சணாகய் ஆ (392). இருளவ இலய்மூன் என்ற இடத்துடன் தொடர்புள்ளவனாகக் குறிப்பிடப் பெறுகிறான்: மஞ்ஞையார் இருளலாய்மூன் (394).

இருளன் இன்று சிறு தெய்வமாக இருந்தாலும் சிந்துவெளி முத்திரைகளில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறான, கரிய நிறம், ஆயாகளுடன் உள்ள தொடர்பு, இளமையானவன் என்றெல்லாம் கூறபபடுவதால் இவனே கிருஷ்ணன், இவனை வழிபட்டவர்களையே, பிற்கால ரிக்வேதம் கிருஷ்ணர்கள் (Krishnas) என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வேதம் 50000 கிருஷ்ணர்கள் இந்திரனால் கொல்லப்பட்டனர் என்று கூறுகிறது.[1] இருளன் = கிருஷ்ணன் என்பன ஒரு பொருள்தரும் 'இருமொழிச் சொற்கள். இவனை, ஆயபா பாலா (237) என்று முத்திரை குறிப்பிடுவது இதை உறுதி செய்கிறது. மேலும், சணாவை ஆரலன் என்று குறிப்பிடுகிறது ஒரு முத்திரை. சணா, கார்த்திகை விண்மீனுடன் தொடர்பு கூறப்படுவதால், இன்று 'நாம் காணும் முருகன் - திருமால் இருவரும் கலந்த ஒரு தெய்வமாக சணா - இருளன் விளங்கி இருக்க வேண்டும்.

கிருஷ்ணன் துவாரகையுடன் தொடர்புள்ளவன். கிருஷ்ணன் = கரிய நிற அரசன். தமிழகத்தின் சங்க இலக்கியம் ஒரு அரிய சான்றினைத் தருகின்றது. இருங்கோ வேள் என்பவன் ஓர் அரசன். கபிலர் காலத்தில் (கி. மு. மூதல் நூற்றாண்டின் இறுதிப் பகுதி) வாழ்ந்தவன். இருங்கோ = கரிய நிற அரசன் என்பது பொருள். இருங்கோவேளைப் பாடும் கபிலர் சில செய்திகளைக் கூறுகிறார்[2]. இருங்கோ வேளின் முன்னோர் துவாரகையை ஆண்டனர் என்றும், அவ்வாறு ஆண்ட பின்னர் 49 தலைமுறைக்குப் பின் வந்தவன் இந்த இருங்கோவேள் என்றும் கூறியுள்ளார். துவாரகையை ஆண்டு நாற்பத்தொன்பது தலைமுறை வந்தவர் என்பதால், அவனது முன்னோர் ஏறக்குறைய, 30 X 49 = 1470 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது கி. மு. 1500 அளவில், துவாரகையை ஆண்டனர் என்பது உறுதியாகிறது. துவாரகை நகரமும் சிந்துவெளி நாகரிக செல்வாக்குப் பகுதியில் அமைந்திருந்தது என்பது இன்றைக்கு உறுதியாகி விட்டது.

சிந்துவெளி முத்திரைகளும் கரிய நிற அரசர்கள் பற்றி சில குறிப்புகளைத் தருகின்றன : வி இரு அரச ஆ (233); மொகஞ்சதாரோ முத்திரை ஒன்று, 'தவர் இருஅரசன்' என்று[3] குறிப்பிடுகிறது. இருங்கோ என்பதும் - இருஅரசன் என்பதும் கரியஅரசன் என்று பொருள்படும்

இரண்டு மாறுபட்ட சொற்களே. கபிலருடைய பாடலில் 'ஒலியற் கண்ணி புலிகடி மாஅல்' என்றொரு தொடர் வருகிறது. புலிகடி மாஅவ் என்பதற்கு, புலியைக் கடிந்து தண்டித்த மால் என்பது பொருள். இது அவனது முன்னோர்கள் தொடர்புடைய செய்தியாகலாம். இங்கு, சிந்துவெளி முத்திரை ஒன்று நம் கவனத்தை ஈர்க்கிறது. ஒரு வீரன் தன் இருபுறமும் எழுந்து நிற்கும் புலிகளின் கழுத்தைப் பற்றி, அவற்றைத் தண்டிப்பது போன்ற முத்திரை ஒன்று உள்ளது. அதன் மேற்புறத்தில் 'இருனா இருளன் (279) என்று எழுதப்பட்டுள்ளது. 'இருள்போன்றவனே இருளன்' என்பது இதன் பொருள். இருளன் புலியுடன் தொடர்புடையவன். அதுபோல இருங்கோவேளின் முன்னோரும் புலியுடன் தொடர்புடையவர்களே. இதனால், இருங்கோவேளின் முன்னோர் இருளனைத் தங்கள் குலதெய்வமாக முன்னோனாகக் கொண்டிருந்தனர் எனலாம். இருங்கோ வேளின் முன்னோர் துவாரகைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்றும், அவர்கள் சிந்துவெளி மக்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அறியலாம்.

(ஆ) சிவன்:

சிவன், அல்லது சிவனின் ஆதி வடிவம் என்று கருதத்தக்க ஒரு யோகியின் உருவம். விலங்குகள் புடைசூழ உள்ள ஒரு முத்திரையில் ஆள் அவ் ஈசக (342) என்று எழுதப்பட்டுள்ளது. சிவன் கயிலை மலைக்குரியவராகக் கூறப்பெறுகிறார்: மி ஈசணா கய்லர் ஆ (373), கய்லயார் ஆ (245), மி மூவ்வ கய்லர் ஆ (386). கயிலை மலைப்பகுதியில் இருந்து உற்பத்தியாகும் ஓர் ஆறு கய்ல ஆறு என்று குறிக்கப்படுகிறது: ஓர்ஞ கய்ல ஆத் (347), கயிலை தவளமலை எனப் படும். எனவே: தவளன் (65), த மலய் ஆத் (69), தவளார் ஆ (251), தவளன் தவழ்த்ன் (364), இடபவாகனம் கொண்ட சிவன் காளார் எனப்படுகிறார்: காவ்வ காளா (106), காளார் ஆ (114). சிவத்தாண்டவம் சிந்துவெளி மக்கள் அறிந்ததே: தவ நடனய்ய ஆ (377).

(இ) பெண் தெய்வம்:

தாய் தெய்வ வழிபாடு காணப்படுகிறது. காட்டை இல்லமாகக் கொண்டவள் என்று கூறப்படுகிறாள். இது காடுறைவாள், காடுகாள் என்று பிற்காலத்தைச் சேர்ந்த சங்க நூல் களில் குறிப்பிடப்படுவதை நினைவூட்டுகிறது. வனா இல்லா ஆட்ட (283), வனா இல்லி கோயில் எழுப்ப ஆ (404), வி வனா இல்லாத்னி (408). இவள் ஐயை, அவ்வை, தவ்வை என்றெல் லாம் அழைக்கப்பெறுகிறாள்: தவ்வய்யார் (52), பண்ண தவ்வய் (134), ஒரு மூ அவ்வா (180), தவகஅய் அய்வ்வர் (241) மதகா/தமகா ஆ (143), ஆத்தி மரத்தை இடமாகக் கொண் டவள் என்று குறிப்பிடப்படுகிறாள்: ஆத்னி (210), சலா இடத்னி (305), ஆத்=ஆத்தி =அத்தி. சலா=சல்=சல்லகி=ஆத்தி. சிந்துவெளியில் ஆத்தி சிறப்பிடம் பெறுகிறது. பிற: மூர்த்ள் பாண்ஈ ஆ (366) பாண்ஈ=பாணீ. மலைவாழ் மக்களான பாணியாக்களைப் போல ஒரு பிரிவு மக்களாகலாம். வாணிபத்தில் ஈடுபட்ட பொனீசியர் பனியா என்று அழைக்கப்பெற்றதாகச் சில வரலாற்றாசிரியர்கள் கூறுவர். சாணாத்னி (418), தவ கன்னி இல்லளா பண்ண ஆ (426), அய்வர்கரா இல்லாகய் ஆ (405), தவ சமத்ள் (423), சணா மூய்ல் மூப்ப ஒஞ்னி ஆ (439), மூய்ல்=மூயில். மூதில் என்பதன் ஆதிவடிவம், இங்கு கோயில். ஒஞ்சி=முலை. முலைக்காம்பு. ஒஞ்சினி=பெரிய மார்பகங்களை உடையவள். உலகிற்கு உணவூட்டும் அன்னையாகிய தெய்வம். சுமேரிய மக்களும் இத்தகைய கருத்தினைக் கொண்டிருந்தனர்.

(ஈ) நாக வழிபாடு:

நாகணா (35), நாகா ஆ (59), இவா நாகர் ஆ (225), பய் நாகய் ஆ (255), பய்=பாம்பின் படம், நாகய மலய்ஞ (268), ஆனாப அய்னாகன் (334), வழலா நாகய் ஆக் (355), ஆண்டவ்வ நாகய் ஆ (373:1). அய் நாகய் ஆட் (362).

(உ) மத—தெய்வத் தொடர்பானவை:

மிஈம (48), மதகாவண்ணா (67), வி அய்ய (85); இள ஆயண்ணா (112), தவ ஆதவ (115), மாமாலணா (124). வாகவ அய்ய (166), நாவவள் (142), கந்தனி (140), ஆண்மன்/நமண் ஆ (176), தவ அழல் (183), தவம் ஆண் (206), மாராத மியார் (214). தவ வயலானன் (276), அய்ர் அய்லாளன் (286), தவ ஆமுகர் இடஇட (300), மி சலனன் (306), மி கயர் (21), தவ மூய (82) மூய = மூய் = பேழை, மூடி, பெட்டி; அகர் மூய (161) அகர் = அகில்; மூலன் (66), மூலாளன் (216) மூலவருடைய பொருட்களைக் காப்போன்; மி மு காவ்வய்யன் (260) காவ்வ + ஐயள் = மூத்த காவடி சுமப்பவள். காவடி எடுப்பது பற்றி பல்வேறு குறிப்புகள் உள்ளன: மூத காவ்வய்யய் (96).

மணாளன் (151), மணாள் ஆணா (310), மி மணாட ஏழுஞா ஆணா (419) மணாட = மணம் ஆட. திருக்கல்யாணம் செய்து வைத்தல். இறைவன் இறைவியின் திருமண விழா. சுமேரியாவிலும் சின் என்ற நிலாக் கடவுளுக்கும், பூமித் தாய்க்கும் கோயில்களில் திருக்கல்யாண விழா நடைபெற்றது. தமிழகத்தில் இன்றும் நடைபெறுகிறது; வின அக் (181) வளமான அக். அக்=சிந்து(பாகிஸ்தான்)மொழியில் வெள்ளெருக்கு (AK=Colotropis Procera)[4] எனப்படும் சிவனுக்கு உகந்த மலர்; அகர் - ஆமளா (274) ஆமளம் = ஒரு சிவத்துதி; அய்ரா நாய (187), நாய (31) நாய்] தெய்வம்; வி மடத் மூப ஆ (191), புனித மடத்து முப்பது ஆ. நாய (449) இம்முத்திரை மத்திய ஆசியாவில் ஆல்டின்தேப் என்ற இடத்தில் கிடைத்தது; நன்றிக்கும் நட்புக்கும் உரியது நாய். வெளிநாடு செல்லும் வாணிகர் தங்கள் நட்புக்கு அடையாளமாகத் தந்த முத்திரையாகலாம்; மகமய் நாய (442) மகமய் = வெளிநாடு செல்லும் வாணிகர் அவ்விடத்திலுள்ள கோயிலுக்குத் தங்கள் வருமானத்திலிருந்து செலுத்தும் காணிக்கை மகமய் என்பது. இச்சொல் பிற்காலக் கல்வெட்டுக்களிலும் வழக்கில் உள்ளது. கடந்த 5000 ஆண்டுகளாக இச்சொல் வழக்கில் உள்ளது. தமிழரது உலக வாணிபத் தொடர்பை உணர்த்தும் இது மேற்காசியாவில் (அரேபியா) திஜோகா (உம்மா) என்ற இடத்தில் கிடைத்தது; இல்லார் ஆ (64) இல்லறத்தார் கொடுத்தது; மடய் ஆளார் சிணா (412) மடய் = மடைப்பள்ளியாகலாம்.

3. அரசன், அரசுகள்:-

அரசய்ய (36); மத அரசன் (125); மினன் (71) மீனன், நான்மாட நகர் மிணன் (177) நான்மாட நகருடைய மீனன். பாண்டியன்; பாண்ட்டயார் இருள பண்ண ஆமா (427) பாண்ட்டயார் = பாண்டயார் = பாண்டயர் = பாண்டியர்; கயல அரச இரு ஆ (341) கயல = கயல் (மூய் > மூய, நாய் > நாய, கயல் > கயல) இதுவும் பாண்டியர் தொடர்புடையதாகலாம். சிந்துவெளியில் மீனன், கயல அரசன், பாண்ட்டயார் போன்ற குறிப்புகள் பல உள்ளன. நான்மாட நகர் என்ற அடைமொழி பாண்டியருடன் தொடர்பு காட்டுகிறது. சிவபெருமான் குறளனுக்கு நீரூட்ட கங்கையை உண்டாக்கியது தொடர்பான கதைக் குறிப்புகள் திருவிளையாடற் புராணத்தில் உள்ளன. இக்கதை சிந்து மாநிலத்தில் (பாகிஸ்தான்) உள்ள ஜிம்பிர் (Jhimpir) என்ற ஊரில் உள்ள மகாதேவன் (சிவன்) கோயில் தொடர்பாகவும் (இக்கதையே) சற்று மாறி வழங்குகிறது. இமவான் மகளான பார்வதியை மணந்து கொண்ட

போது, வந்திருந்த விருந்தினர்களுக்கு அருந்த நீர் இல்லாமையால், மகாதேவர் அக்கோயில் அருகிலேயே சில நீரூற்றுக்களை உண்டாக்கினார். அவை இன்றும் பயன்பட்டு வருகின்றன என்கிறார் டேவிட்ராஸ் என்னும் ஆசிரியர்[5]. மக்கள் இடப்பெயர்ச்சியே இத்தகைய கதைக ளிடையே காணப்படும் தொடர்பிற்குக் காரணமாகும்.

வில்லன் (155); விலாளன் (156) வில்லன் = வில்லவன் = சேரன். இதனை உறுதி செய்யுமாறு வேறு சில குறிப்புகளும் உள்ளன: தவ மலாள அரசண்அ ஆ (368); தட மலாளன் (369); மஞ்ஞையார் மலாள ஆதவ வவனி (432) ஆதவவவனி = ஆதவ வவனி — பவனி, மலாள = மலையாள என்பதன் பேச்சு வழக்கு. மலாளன் = மலையாளன். மலாள அரசண் = மலையாள அரசன். இன்றைய கேரளம் மலையாளம் எனப்படும். மலையாள நாட்டு மன்னர்கள் சேரர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் வானவர் என்று பெயர் பெறுதலாலும், மலையாளத் தமிழில் மூக்கொலிகள் நிறைந்திருந்ததாலும், அவர்களைத் திபேத்திய சீனர்களுடன் இணைத்துக் காண்பர் சில வரலாற்றாசிரியர். ஆயண்ணல் நாட்ட (337) ஆய் + அண்ணல். ஆயர்களின் தலைவளான இறைவன். பசுபதி? விலங்குகள் சூழ அமர்ந்துள்ள யோகி ஆயண்ணல் ஆகலாம்; வி மன்ன தேளண் பய்ற் (338), தவ தவள நாட ஆ (344) தவளம்=கைலைமலை. தவளநாடு = கைலை மலையைச் சூழ்ந்த நாடு; பண்ணய் அரச அரசன்அ வய இல்ல பனிஆ (437); கான் அரச கயகயன் (448); கயகயன் = கய்கயன். கேகய நாட்டரசன் கய்கயன் ஆகலாம். இது, மேற்கு ஆசியாவில் கிடைத்த முத்திரை; இள நாட ஆ (153).

4. நதிகள் :

சறா (12), சராயு போன்ற ஒரு நதியாகலாம்; வனா சங்கரா (14) பழங்காலத்தில் சிந்துவுக்கு இணையாக ஓடிய சங்க்ரா - நள சங்க்ரா என்று அவ்வப்போது அழைக்கப்பட்ட நதியாகலாம்[6]. கய்லய் மலையில் தோன்றும் ஒரு ஆறு கய்ல ஆறு எனப்படுகிறது. ஓர்ஞ கய்ல ஆத் (347); த மலய் (69) த மலய்= தவள மலய் சிந்து, சட்லெட்ஜ் நதிகள் கயிலையில் உற்பத்தியாவதை வெகு காலமாகவே மக்கள் அறிந்திருந்தனர்[7]. எனவே, கய்ல ஆத் சிந்துவாகலாம்; அமுணா (24) அமுண்ணா (81) அமுணா ஆத் (200), அமுணா = யமுனா ஆறு. யமுனை வரை அறிந் திருந்தனராதல் வேண்டும்; தவ இல்லாளன் - ஆய்யய் ஆரஞ - மூ வற்றத கன்ய வடவா (320) மூத்த கன்னியான வற்றாத கன்னியான வடவா நதி; வேறொரு முத்திரையிலும் இந்த ஆற்றைப் பற்றிக் குறிப்புள்ளது.' மூ வற்றத கன்ய வடஅய் (395) வற்றத = வற்றாத என்னும் சொல்லின் பிழையான வடிவம்; ஆமுணாக பண்கர் இட இட (375); வய்கால் தன்ணில் அய்வயலா இருள்னன் (435).

5. இடப்பெயர்கள்:

அய்னா (23) ஓர் இடப்பெயர்; அன்ன இடத் அய்னா (276) அன்னங்கள் நிறைந்த- அல்லது அன்னம் என்ற பெயருள்ள இடத்தினைச் சேர்ந்த அய்னா. அய்னா மத்திய ஆசியப் பகுதியில் ஆரல் கடலை ஒட்டிய இடமாகலாம், அன்னாவ் என்றொரு இடமும் அப்பகுதியில் உண்டு; ஆதவ்வம மலய்ஞா (172) ஆதவ்வம மலய். ஆதவ்வம = ஆதவம் = சூரிய ஒளி. உதயகிரி = சூரியன் உதிக்கும் மலய் என்பது போன்ற பொருளாகலாம்; ஆதவ்வம்+அ = ஆத வத்தினது. ஆதவ்வம மலய்ஞா = சூரியனது மலய்க்குரியவனே; இல்லாய்மூன் (261); லமூய்ன்ணா (262); தவட் இல்லய்மூன் (409) இல்லமூன் = இலய்மூன், தில்மூன் (DILMUN) என்பதன் திரிபு. தில்முன் என்பதிலுள்ள, D என்ற ஒலியுடைய சொல்லை ஒலிக்க முடியாத

மக்சள், தில்முன் > இல்முன் > ல்ய்முன் = இல்ய்முன் = இலய்முன் என்று மாற்றி - திரித்து வழங்கினராதல் வேண்டும். சொல் முன் இகரம், லகர ஒற்றுக்குப் பின்னர் (த்+இ+ல் > (த்) + ல் + இ = ல்ப் > ல் + அய் = லய்) இடமாற்றம் அடைந்துள்ளது. சிந்துவெளியே தில்முன் என்று பலரும் கூறியுள்ளனர். அருண்குமார் என்பவர் ஹாரப்பா நாகரிகப் பகுதியில் காளிபங்கன் அருகே தில்முனா என்ற சிற்றூர் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்8. தில்முன் கிழக்கில் சூரியன் உதயமாகும் நாடு, வளமான இடம், வாணிபத்தில் சிறந்து விளங்கியது என்று சுமேரிய ஏடுகள் கூறுகின்றன. ஆதவ லய்முன் (350); தவ பன்னிரு வன லய்முன் (406); மஞ்ஞையார் இருள லய்முன் (394); கோயில் மலய்லா லய்முன் (398) இல்ய்முன் என்பதைத் தங்கள் மொழி மரபுக்கு மாறாக லகர மெய்யை முதலெழுத்தாகக் கொண்டு எழுதுவதாலும், வெவ்வேறு மாறுபட்ட ஒலிப்பு முறைகளால் எழுதுவதாலும், இந்த இடம் சிந்துவெளி மக்களுக்கு வேற்று இடமாகும் என்று நினைக்கவேண்டியுள்ளது.

6. சில சிறப்புப் பெயர்கள்: செய்திகள்:

ஆள் (3), ஈசக (342), ஆண்டவ்வ (372). சாமி (72). இரய் (50) இறை. மேற்கண்ட பெயர்கள் இறைவனைக் குறிக்கும் சிந்துவெளிச் சொற்கள். மேலும், 'பகவ (149) என்ற சொல்லும் உள்ளது. இதனை திருவள்ளுவர் தன் நூலின் முதல் குறளிலேயே குறிப்பிடுகிறார்; ஞான் ஞான் (5) ஞான்(று); அதன் (30); விமணா (70); மனன் (120); கவ்வண்கட் (141); தவ ஆயனாளா (157) ஆயன் + ஆளா = ஆயர் இறைவனே; வன்டன் (137); வவ்ய்வய் ஆ இரவ்வ (160); வவ்வியவை ஆ இருபது. ஆநிரை கவர்தல் தொடர்பான முத்திரை; வி ஞாணான் (229); வில்லம (230); வள்ளன் (239); தவ வட்ட (246); ஆனண்டன் (269) ஆன்+அண்டர் = ஆன் ஆயர்; இத பண்மர்ர (308) இத = இதை=கப்பற் பாய், பண்மர்ர= பன்மரம் = பல பாய்மரம்; வி நன்ணாளன் (325); இல்லா தேளன் ஆதற் (331); மி மூலய் தேளன் ஆ (332); அத் பண்ண ஆள் இளர் யவ (335) யவ = யவம் = அரிசி, வால் கோதுமை போன்ற தானியங்கள்; ஞான் ஏழுல கன்இருனி (390) இது வானியல் தொடர்பான முத்திரை; வள்ளய் மூ(ன்று) ஆணா (396) வெள்ளை மூன்று ஆன் ஆ; அமயார்டனன் இட (410); கர்தப/பதகர் இல்லா ஆக் (413) ஆக் = ஆக்கம். அம் விகுதி பெறாத சொல்; ஆயபன் மூடவ்வண்ணா (443); வய காவண்ணா (445); இள ஆயண்ணா (112); வங்க படதவா (150) வங்கம் = கப்பல், படதவா = பரதவர்.

7. செந்தமிழ்ச் சொற்கள்:

வய (1); யாழ் (10); ஆயர் (15); மிகம (18); கழகன் (26), சய்ய (28) செய்ய; நாள் (29) வயம (32); மரய் (44) மரை = மான்; அகத் (45); மிபய (49); இரய் (50) இறை; வரா (54) வரை; சாமி (72); விள (76) செழித்த; ஆண் (74) கோழி; விளா (77); அய்ய (85, 86); வய்ன் (97) இடம், ஏழாம் வேற்றுமை உருபு; இளரி (107); அக பஅ (108); நாக் (109) நாக் = நாகு. இளங்கன்று; மனன் (120), தட (175); இல்லான் (131); நானல் (132); அழல் (183); வனாளன் (227); இயன் (202): பய்ய (211); மூலன் (66); வயல் (218); அரசன் (125); நல்ல (232); வயலன் (235); வயவர் (248); பண்ண (253), பய் (255) பாம்பின் படம்; வயலாளன் (276); பண்ணயன் (277); தன்ணி (291); கய (288) கயம் = குளம்; அய்லன் (291) வேலன்; ஆசய் (294); மூழ் (295); முகிழ்; பய் மணம் (296) பய் = மென்மை, இதம், பசிய; சலனன் (306) மழவ ஆட் (318), கன்ய (320) கன்னி; மூப்ல் (358) மூதில்; மூலய் (332); மியார் (336); அன்னல் (337); அண்ணல்.

பய்ற் (338); பபிர்; கபல (341); கழல் (358); வழலா (355); வண்டியன் (365)! ஆய் (382); அய்வர்கரா (372) ஐவரது கரை, அல்லது ஐவரது ஆற்றங்கரை ஊர்; ஒருத் (428) விலங்குகளில் ஆண்; தவம் (206); ஆண் (206) ஆடவன்; தட ஆற்றள் (278); மூவ்வன் (240); மூப்ப (439); இள (231); இளம்மி (234); நாய் கனல் (185).

மேற்கண்ட முத்திரைகள் தவிர மேலும் பல முத்திரைகள் உள்ளன, அவற்றிலும் பல சிறப்புச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. சில இன்றியமையாச் செய்திகள். இந்நூலில் உள்ள சிறப்பாக எடுத்துக் கூறத்தக்க முத்திரைகள் சில, இங்கு எடுத்துக்காட்டப் பெறாமல் விடுபட்டுள்ளன. இந்நூலில் உள்ளவற்றை விட மிகுந்த செய்திகளைக் கொண்ட முத்திரைகள் வேறு பல உள்ளன. இவை நேராக முத்திரைகளை ஒப்பிட்டுப் பார்த்து எழுதப்பட்டவை அல்ல. பல்வேறு ஆசிரியர்களின் நூல்களில் இருந்து தொகுக்கப் பெற்றவை. எனக்கு வாய்ப்பும், வசதியும் கிடைக்குமேயானால், அடுத்து வரும் பகுதிகள் விரிவானதாகவும், முத்திரைக் குறிப்புகளைப் பற்றிய ஆய்வுக் கருத்துக்களோடும் அமையும் என்று கருதுகின்றேன்.

இது சுருக்கமான நூலாதலால், ஏறக்குறைய ஆயிரம் பக்கங்கள் கொண்ட கையேட்டுச் சுவடி, நூற்றுஐம்பது பக்கங்களுக்குச் சுருக்கப்பட்டுள்ளது. இதனால் பல செய்திகள் கூற இயலாமல் விடுபட்டுப் போயின. ஒரு குழுவோ, அல்லது நிறுவனமோ செய்ய வேண்டிய மிகப் பெரிய செயலை, தனி ஒருவனாக இருந்து செய்ததால் ஏற்பட்ட குறைபாடுகளும், பிழைகளும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடும்; மன்னிப்பீர்களாக. சுட்டிக் காட்டினால் திருத்தி எழுதுவதற்கு வசதியாக இருக்கும். தமிழ்மொழி, சிந்துவெளி மொழியின் சேய் மொழியே. அம்மொழியினை அன்னைத் தமிழ் என்றால், தமிழ், கன்னித் தமிழ் என்றாகும். ஆயினும் சிந்துவெளித் தமிழ், தூய்மையான, பிறமொழிகளால் மாசுபடாத நற்றமிழ் - செந்தமிழ். தமிழ்மொழி உலகின் புராதன மொழிகளில் ஒன்று என்று கூறுகிறோம். அவ்வுண்மை இனிக்கிறது.

குறிப்புகள்

1. ரிக்வேதம், சூக்தம். 96, 13 — 15.
2. புறநானூறு, கபிலர், 201, 202.
3. Mahadevan, Iravatham., The Indus Script, Texts, Concordance And Tables 1977, ASI, New Delhi, P. 62 : 2130.
4. Lambrick, H. T, C. I. E, M. A., Sind, 1939, Sindhi Adabi Board, Hyderabad, (Sindu) Pakistan, P. XIV.
5. Ross, David, C. I. E, F. R. G. S, The Land of The Five Rivers And Sindh, Languages Department, Punjab 1970, P. 26.
6. H. T. Lambrick எழுதிய அதே நூல், பக் 26.
7. Allen, Charles, A Mountain In Tibet, 1982, Cha : I.; The Fountainhead o Asia, PP. 30 — 33.
8. Asthana, Shashi, Ph.D, 1976, History And Archaeology of India's Contact With Other Countries - From Earliest Times to 300 B.C., B. R. Publishing Corporation, Delhi, PP. 348.-350


— — —

அச்சுப் பிழைகள்

சென்னையில் நூல் அச்சாகும்போது, அதனை வெளியூரில் இருந்து மேற்பார்வை செய்வதன் துன்பத்தை இப்போது உணர்கிறேன். விரைந்து வெளியிட வேண்டும் என்ற அவசரத்தினால் தெரிந்தே சில பிழைகள் ஏற்பட்டு விட்டன. திருத்தங்களை ஒப்பிட்டு நூற்பொருளை ஆராய்க.

பக்கம்	படம் - வரி	பிழை	திருத்தம்
7	1	குறியீடுகளையும்	குறியீடுகளைக்
16	9	ஆத்ற், ஆதற்	ஆத்ற் = ஆதற்
27	12	(6) ட என்ற	(6) ட் என்ற
27	38	கொண்டால்தால்	கொண்டால்தான்
28	30	2. ஆ - த் - 'யா	2. ஆ - த் - 'ய
35	23	குழுஉக்குறி	குழூஉக்குறி
59	1	கூட்படமுத்துக்	கூட்டெழுத்துக்
40	5 : 5	ப்ய் = ய் + ப்	பய் = ய் + ப்
47	தலைப்பு (Folio)	புதிய அய்வுகள்	புதிய ஆய்வுகள்
51	,,	,,	,,
53	,,	,,	,,
59	,,	,,	,,
49	182	ண்ணா - மூ - தவ	ண்ணா - த - மூ - தவ
49	183	தவ - அ - ள் - ள்	தவ - அ - ழ் - ள்
51	220	தவ - வ - வ்வ - ய - இட	தவ - வ்வ - ய - இட
55	361	தன்ணி	தன்னி
61	91	தேனண்	தேளற்
64	183	ஆழல்	அழல்
68	361	தன்னி	தன்ணி
69	371	''ள ள்	''ள ன்
70	426	வ கன்னி	தவ கன்னி

குறிப்பு :



பூரண சந்திர ஜீவா

இவர் 23-02-1947 இல் தஞ்சை மாவட்டம் நாகப் பட்டினத்தில் பிறந்தவர். எம். ஏ., பி. எட்., பட்டம் பெற்று, அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வேலை செய்கிறார். நாகை. ப. ஜீவா என்ற பெயரில் தமிழகத்திலுள்ள புகழ்மிக்க இதழ்களில் கதை, கவிதைகள் எழுதியவர். ஆனால், கடந்த 1980 முதல் தொல்பொருள் ஆய்வு, தமிழ்நாட்டின் பண்டைக்கால வரலாறு, சங்க காலம் போன்ற துறைகளில் மட்டும் ஆர்வம் காட்டி வருகிறார்.

1967 முதல் (தன் 20-ஆம் வயது முதல்) சிந்துவெளி எழுத்தாராய்ச்சியில் கவனம் செலுத்தி வருகிறார். குறிப்பாக 1977 முதல் இத்துறையில் தீவிரமான ஆய்வுகள் செய்து வருகிறார். 1988-ஆம் ஆண்டில் தன் ஆய்வுகளில் வெற்றியைக் கண்டு, அதுமுதல் சிந்துவெளி மொழியைப் பற்றிய ஆய்வு முடிவுகளை வகைப்படுத்தி—தொகுத்து வருகிறார். இன்னும் ஆய்வு முற்றுப்பெறவில்லை. பொருள் வசதியின்மையால் விரிவான அளவில் அவரது ஆய்வுகளைத் தொடர முடியாத நிலை உள்ளது. தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள், பொது நிறுவனங்கள், சிந்துவெளி ஆய்வில் ஈடுபாடுடைய நல்லோர் மற்றும் அரசினர் ஆதரவை நாடுகிறார்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது ஆசிரியரான மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அய்யாவின் மாணவர் இவர். 'இவருடைய வளர்ச்சியால் தமிழும் வளரும் என்ற எதிர்நோக்கு எனக்கு உண்டு' என்ற அவரது பாராட்டைப் பெற்றவர்.

முன் அட்டையிலுள்ள முத்திரைக்கு விளக்கம்:-

க் - ஆ - ட் - ள் - ட - ழ - '' மி - த
தமி '' தமிழ ஆள் ஆக் ஆட்ட

